உ

தமிழ்ப் பொழில்.

தஞ்சை, கரந்தைத் தமிழ்ச் சங்கத் திங்கள் வெளியீடு.

துணர் ௬	பிரமோதூத, தை	மலர் ௰

பல்லவர் கற்றளிகள்.

திரு. S. K. கோவிந்தசாமி அவர்கள், B. A., (Hons.)
சரித்திர ஆசிரியர், அண்ணாமலைப் பல்கலைக்கழகம், சிதம்பரம்.

தென்னிந்தியாவில் இரயில்வழியாகவோ அன்றிச்சாலைவழியாகவோ சுற்று வழிப்போக்குகள் செய்வோர் கண்ணையும் கருத்தையும் கவர்வன தேவகோட்டங்களும், அவற்றின் உன்னத விமானங்களும், உயர்ந்த கோபுரங்களுமே யாம். அக்கோட்டங்கள், உலக வாழ்க்கையெனும் சுழல் காற்றால் அலைப்புண்டு உழலும் மாந்தர்க்கு ஆறுதலளித்தலோடு பேரின்ப நெறி காட்டும் கலங்கரை விளக்கமாகவும் அமைந்திருக்கக் காணலாம். இங்ஙனமாகிய கற்றளிகள் எண்ணிறந்தனவாம். அவைகள் யாவும் ஒரே காலத்தில் கட்டப்பட்டன அல்ல என்பது யாவரும் அறிந்த உண்மையாகும். பன்னூறு ஆண்டுகளாக இத்“ தமிழ் கூறு நல்லுலக”த்தை அடிப்படுத்தி யாண்டுவந்த முடியுடை வேந்தரான பல்லவர், பாண்டியர், சோழர், இராயர், நாயக்கர் முதலியோர் அளவிறந்த பொருட்செலவு செய்து சீரிய சிற்ப வினைஞரைக்கொண்டு அழகாக அமைத்த ஆலயங்களே இன்று தென்னாட்டை அலங்கரிப்பனவாகும். இக்கோட்டங்கள் சைவ வைணவ சமயங்களுக்கு இருப்பிடமாக இருத்தலோடு சிற்ப நலம் சான்ற சித்திரக் கூடங்களாகவும் ஓவியச் சாலைகளாகவும் சிறந்து விளங்குகின்றன.

இத்தமிழகத்தில் காஞ்சியிலிருந்து அரசு புரிந்த சிம்ம விஷ்ணுவின் வழிவந்த பல்லவப் பேரரசர்களே முதன்முதல் ஆறாம் நூற்றாண்டின் இறுதியிலும் ஏழாம் நூற்றாண்டின் தொடக்கத்திலும் கற்றளி எடுக்கத் தொடங்கினார்கள். இதற்கு முன்னர் தென்னாட்டில் அமைந்திருந்த ஆலயங்கள் மண்ணாலும் மரத்தாலும் ஆக்கப்பெற்றிருந்தமையால் விரைவில் அழிந்து பட்டன. இவ்வுண்மை வடமொழி தென்மொழி இலக்கியங்களால் அறியப்படுதலோடு கீழ்வரும் பல்லவர் கல்வெட்டொன்றாலும் வலியுறுத்தப்படுகிறது. தென்னாற்காடு சீமையிலுள்ள மண்டகப்பட்டு என்ற சிற்றூரில் மகேந்திரவர்மன் செய்வித்த ஒரு கல்மண்டபத்தில் "இக்கோயில் பிரமனுக்கும், ஈஸ்வரனுக்கும், விஷ்ணுவுக்கும், விசித்திர சித்தனால் செங்கல், சுண்ணாம்பு, மரம் உலோகமில்லாமல் அமைக்கப்பட்டது" * என்று பொறிக்கப் பட்டிருத்தலால், அவ்வரசனுக்கு முன்னர் மண் மரம் முதலிய பொருள்களாலேயே கோயில்கள் கட்டப் பட்டுவந்தன என்பது நன்கு அறியப்படும். விசித்திரசித்தன் என்னும் தொடர்மொழி புதுவது புனைபவன் என்று பொருள் படுதலால் மகேந்திரவர்மனே நம்நாட்டில் முதன்முதலாகக் கருங்கல்லில் கோயில் சமைத்தவனாவான் என்பதில் சிறிதும் ஐயமில்லை.

பல்லவர் கற்றளிகளையும் அவை காணப்படும் இடங்களையும், அவைகளின் சிறந்த இலக்கணங்களையும் ஆராய்ப் புகுமுன் அப்பல்லவர் வரலாற்றைச் சுருங்க உரைத்தல் இன்றியமையாததாகும். தொன்றுதொட்டு இத்தமிழகத்தை ஆண்டுவந்த சேரசோழ பாண்டியர் தம்முள் மாறுபட்டு இடையறாது போர் விளைத்தமையால், ஆற்றல் குன்றி நின்ற அற்றம் நோக்கி, பல்லவர் என்ற ஒருபுதிய வகுப்பினர் காஞ்சிபுரத்தைக் கைப்பற்றிச் சோழமண்டலத்தின் வடபகுதியான தொண்டை மண்டலத்திலும் "தெலுங்க வழியிலும்" தம் ஆட்சியை நிறுவினார்கள். பல்லவர் இந்நாட்டினரோ அன்றி வெளிநாட்டினின்று குடியேறியவரோ என்ற ஆராய்ச்சி ஈண்டு வேண்டற்

* Epigraphia India. Vol. XVII. p. 7.

பாலதன்று. இவ்வாறு பல்லவர் நிறுவிய ஆட்சி சற்றேறக் குறைய இருநூற்றைம்பது ஆண்டளவும் (கி. பி. 600—850) தென்னிந்தியாவில் நிலைபெற்றிருந்தது. † சிம்ம விஷ்ணு என்பான் காஞ்சிபுரத்தில் பல்லவ அரசாங்கத்தை நிலைநிறுத்திய காலத்தே தெக்கணத்தில் சாளுக்கியர் வாதாபி என்னும் நகரிலும், பாண்டிய மன்னனான கொடுங்கோன் மதுரைமா நகரிலும் தத்தம் ஆட்சியை நிறுவினார்கள். வடபால் சாளுக்கியராலும், தென்பால் பாண்டியராலும் நெருக்கப்படவே பல்லவர் ஒய்வு ஒழிவு இன்றி அவர்களோடு போர்புரிய நேர்ந்தது. மஹேந்திரவர்மன், "வாதாபிகொண்ட நரசிங்கவர்மன்," இரண்டாம் நந்திவர்மன் "தெள்ளாற்றெறிந்த நந்திவர்மன்" முதலான பல்லவ அரசரெல்லாம் சிறந்த போர் வீரராய் விளங்கினார்கள். இம்மன்னர் நிகழ்த்திய போர்களில் வீரமாது இங்குமங்கும் மாறிமாறி இருந்து வந்தாள் எனினும் பல்லவர் ஆட்சி வடக்கே கிருஷ்ணா நதிவரையிலும் தெற்கே புதுக்கோட்டை வரையிலும் மேற்கே மைசூர் கொங்குநாடு வரையிலும் விரிந்து நிலவியது. அவர் ஆக்கமும் பெருகிற்று. அக்கரைச் சீமைகளான பர்மா, மலாய் முதலிய நாடுகளோடு வாணிகம் நடைபெற்றது. இவ்வாறு வாணிபத்தாற் குவிந்தபொருளைச் சிறந்த துறையில் செலவிடச் சமயம் வாய்த்தது. ஏழாம் நூற்றாண்டில் தென்னிந்தியாவில் பல்லவர்க்கும் பாண்டியர்க்கும் நெடும்போர் நிகழ்ந்து கொண்டிருக்க, ஒருபால் சைவரும் வைணவரும் சமண சாக்கியரோடு பெரும்போர் தொடங்கினார்கள். மஹேந்திரவர்மன்

† பல்லவர் கி.பி. 250 முதற்கொண்டே தொண்டை மண்டலத்தின் வடபால் குறுநில மன்னராய் ஆண்டு வந்தனர் என்பதும், அவர் முதலில் பிராகிருதத்திலும், பின்னர் வடமொழியிலும் செப்புப் பட்டையங்கள் அளித்தாரென்பதும், அவரில் ஒருவனான விஷ்ணுகோபன் என்பான் சமுத்திர குப்தனால் முறியடிக்கப்பட்டான் என்பதும் சரித்திர ஆராய்ச்சியாளர் அறிந்தனவே. ஆனால் அவர் சிம்ம விஷ்ணுவுக்கு முன்னால் தென்னிந்தியாவில் பேரரசு செலுத்தவில்லை யாதலால் அவர் வரலாற்றை ஈண்டுக் கூறாது விடுத்தனம்.

திருநாவுக்கரசரால் சமணசமயம் * துறந்து சைவசமயத்தை மேற்கொண்டான். புதிதாக மேற்கொண்ட கொள்கையில் அம்மன்னனுக்கு மனக்கிளர்ச்சி பிறந்தது. அதற்கறிகுறியாக அன்னோன் நாடெங்கும் சிவனுக்கும் திருமாலுக்கும் பலகற்றளி எடுக்க முன்வந்தான். அவன் பின்வந்த நரசிம்மவர்மன் ராஜ சிம்மன் முதலியோரும் ஆழ்ந்த சைவப்பற்றுடையவர்களாக இருந்தமையால் அத்திருப்பணிகளை மேலும் மேலும் நடத்தி வந்தார்கள். கடைசியாக அபராஜிதன் என்ற பல்லவன் அரசு கட்டில் ஏறியபோது பாண்டியன் வரகுணன் பல்லவர் நாட்டின் மேற் படையெடுத்தான். கும்பகோணத்திற் கருகிலுள்ள திருப்புறம்பியம் என்னும் ஊரில் நடந்தபோரில் வரகுணன் அபராஜித பல்லவனுல் தோல்வியுற்றுன் † எனினும் பல்லவ மன்னன் துணைவனுன பிருதிவிபதி போர்க்களத்தில் இறந்து பட்டான். பல்லவ சேனையும் சிதைந்தது. இச்சமயம்பார்த்து, தஞ்சைப் புதிய சோழமன்னனுன ஆதித்தன் சுமார் கி.பி. 880ல் அபராஜித பல்லவனைவென்று தொண்டை மண்டலத்தைக் கைப்பற்றிக் கொண்டான். அதனுடன் பல்லவர் பேரரசுபட்டுச் சோழர் பேரரசு தளிர்த்தது.

இனி, பல்லவர் கற்றளிகளின் சிறப்புச் சிறப்பை ஆராய்வாம். மஹேந்திரவர்மன் காலந்தொட்டு அபராஜிதன் காலம் முடிய இடைப்பட்ட காலத்தில் பல்லவரால் எடுக்கப்பட்ட கற்றளி களை அவற்றின் ஒற்றுமை வேற்றுமை நோக்கி நான்கு பகுப் பாக வரையறுத்திருக்கிறுர்கள். அவைகளுக்கு முறையே

* திருநாவுக்கரையர் காலத்தில் சமணமதத்தைத் துறந்து சைவ சமயத்தைத் தழுவின பல்லவ அரசன் மஹேந்திரவர்மன்தானென்பதைச் சிராப்பள்ளிக்குன்றின் மேலுள்ள ஒற்றைக்கல் மண்டபத்துக் கல்வெட்டு வலியுறுத்தும். பெரிய புராணத்தில் "குணதர வீச்சரமெடுத்தான்" (திருநாவுக்கரசர் புராணம்-146), என்ற சொற்றொடரில் "குணதரன்" என்றது மஹேந்திரவர்மனையே குறிக்கும்.

† வரகுணனுல் பல்லவ அபராசிதன் தோல்வியடைந்தான் என் பாரும் சிலர் உளர் (eg., P. T. Srinivasa Ayyangar, The Pallavas p. 139.) ஆனுல் இரண்டாம் பிருதிவிபதியின் உதயேந்திரம் செப்புப் பட்டையம் ஐயந்திரிபற அபராசிதனேவென்றுன் என உணர்த்திய பின்னரும் இக்கூற்றுப் பொருந்தாததாகும்.

1. மஹேந்திரவர்மன் சிற்பநடை (கி.பி. 610-640). 2. மாமல்லன் சிற்பநடை (கி.பி. 640-674). 3. ராஜசிம்மன் சிற்பநடை (674-800.) 4. நந்திவர்மன் சிற்பநடை (கி.பி. 800—880) என்று பெயர் கொடுத்திருக்கின்றார்கள்.*

முதலாவதாக மஹேந்திரவர்மன் ஆக்கிய கோயில்களை எடுத்துக் கொள்வோம். லாங்கர்ஸ்ட் (Longhurst) என்பார் மஹேந்திரவர்மனைத் தென்னிந்தியாவின் சிற்பத்தபதி என்று கூறியிருத்தல் மிகப் பொருத்தமாகக் காணப்படுகிறது. இவன் கோயில்கள் வடஆற்காட்டுச் சீமையில் மஹேந்திரவாடியிலும் செங்கற்பட்டுச் சீமையில் பல்லாவரம், மாமல்லபுரம் திருக்கழுக்குன்றத்திலும், தென்ஆற்காட்டுச் சீமையில் மண்டகப்பட்டு, தளவானூர் முதலிய இடங்களிலும், திரிசிரபுரச் சீமையில் நாமக்கல் திரிசிரபுரத்திலும், புதுக்கோட்டையில் சித்தன்ன வாசல் மலையடிப்பட்டியிலும், இன்னும் பல இடங்களிலும் காணப்படுகின்றன. இக்கோயில்கள் எல்லாம் மலைப்பாறையைக் குடைந்து மண்டபம்போல் செய்யப்பட்டுள்ளன. அவைகளை ஒற்றைக்கல் மண்டபங்கள் அல்லது ஒரு கல் மண்டபங்கள் † என்று அழைக்கின்றார்கள். மேற்புறம் கரடுமுரடான கற்பாறையாக இருக்க உட்புறம் பருத்த சதுரத் தூண்களால் தாங்கப்பட்ட விசாலமான முன்கட்டும் அதற்குப்பின்னால் ஒருசிறிய குகை போன்ற கருப்பக் கிரகமும் இக்கோயில்களில் அமைந்திருக்கக் காணலாம். தூண்களெல்லாம் பெரும்பாலும் அதிக அலங்கார மற்றவைகளாகவே இருக்கும். பிற்காலத்திய 'போதிகை' "பலகை" "குடம்" "கலசம்" "கால்" "வேதிகை" "காந்தம்" முதலான தூண் உறுப்புகள் அக்காலத்திய தூண்களில் காண்பதரிது. ஆனால் மஹேந்திரவர்மன் காலத்திய ஒற்றைக்கல் மண்டபங்களில் சிற்ப அலங்காரம் குறைந்திருப்பினும், வனப்புவாய்ந்த பதுமங்களும் பன்னிற ஓவியங்களும்

* Arch. Sur. India—Memoir No. 17. p. 8.

† திருக்கழுக்குன்றத்தில் இன்னும் மஹேந்திரன் கோயிலுக்கு "ஒரு கல் மண்டபம்" என்ற பெயர். திருவாங்கூர் நாட்டிற்காணும் "வர்க்கல்" கோயில்களும் "ஒரு கல்". மண்டபங்களேயாம்.

நிறைந்து உட்புறத்தை அழகு செய்வனவாம். இதற்குச் சான்றாகச் சிராப்பள்ளி மலையின் மேலுள்ள ஒற்றைக் கல் மண்டபத்தின் உட்சுவற்றில் செதுக்கியிருக்கும் கங்காதரன் வடிவத்தின் மாட்சி "கண்டவர்க்கன்றி கேட்டார்க்கு உரைப் பருங்கணக்கிற்றாகும்". சித்தன்ன வாசலிலுள்ள ஒற்றைக்கல் மண்டபத் தூண்களிலும் முகட்டிலும் தீட்டியிருக்கும் சமண முனிவர் வடிவங்களும் உயிர் ஓவியமோவென்று பார்ப்போர் ஐயுறும்படியான பறவைப் படங்களும் "சொன்னலங் கடந்த காமச்சுவை" ததும்பும் கணிகையர் ஓவியங்களும் பெரும்புகழ் பெற்ற அசாந்த (Ajanta) குகைச் சித்திரங்களைவிட மேலானவை என்று ஓவியத்துறை வல்ல அறிஞர் ஒப்பும் பான்மையில் அமைந்துள்ளன.

மாமல்லன் சிற்பநடை:—(640—674) மாமல்லன் என்று சிறப்புப் பெயர்பெற்ற நரசிங்கவர்மன் தன் பெயரால் மாமல்ல புரம் என்னும் துறைமுகப்பட்டினம் நிறுவி அதில் அழகிய பலகற்றளிகள் எடுத்தான். அவ்வூர், திருப்பாசுரங்களில் கடன் மல்லை என்றும் இப்பொழுது மகாபலிபுரம் என்றும் வழங்கு கின்றது. அங்கு வாதாபிகவர்ந்து புலகேசியைச் சிதைத்த நரசிம்மவர்மனும் அவன் பின்வந்த இரண்டாம் மஹேந்திர வர்மன், பரமேஸ்வரவர்மன் முதலியோராலும் இயற்றப்பட்ட கோயில்களை ஒற்றைக்கல் மண்டபங்கள் என்றும் ஒற்றைக்கல் ரதங்களென்றும் இருவகையாகப் பகுத்துள்ளார்கள். அவற்றுள் முதல் வகுப்பில் சிறப்பாக உள்ளவை வராகப் பெருமாள் கோயில், மகிடாசுரமர்த்தனி கோயில்கள் எனலாம். இவை மஹேந்திரவர்மன் மண்டபங்கள் போலாது மிக அழகிய வேலைப்பாடு உடையன. மாமல்லன் சிற்ப நடையில் சிறப்பான அங்கம் அவன் கோயில்களில் செவ்விதாகச் சித்தரிக்கப்பட்டுள்ள சிங்கத் தூண்களேயாம். குகையின் வாயில் கும்பங்களாலும் கூடுகளாலும் அலங்கரிக்கப்பட்டிருக்கும். உட்பக்கச் சுவர்களில் ஓவியநயம் மலிந்த உருவங்கள் சித்தரிக்கப் பட்டிருக்கும். அவற்றுட் சிறந்தன எங்கும் புகழ்பெற்ற மகிடாசுரமர்த்தனி, வராகப்பெருமாள், கஜலக்ஷ்மி, அனந்த சயனர் படிவங்களாம்.

நரசிம்மவர்மன் நடையில் காணப்படும் இரண்டாம்வகைக் கோயில்களுக்கு ரதங்கள் என்று பெயர். மாமல்லபுர ரதங்கள் கல்லில் தேர்போல் செய்யப் பட்டிருத்தலால் அவற்றை ரதமென்று கூறுகிறார்கள். இவ்வித ரதங்கள் ஐந்து அங்கரில் அமைந்திருந்தமையால் பிற்காலத்தில் அவற்றைப் பஞ்ச பாண்டவ ரதங்கள் என்று பெயரிட்டார்கள். பாஞ்சாலிரதம் என்றும் அர்ஜுன ரதம் என்றும் பீமரதம் என்றும் தர்மராஜ ரதம் என்றும் சகாதேவ ரதம் என்றும் அவ்வைந்து ரதங்களுக்கும் பெயரிட்டார்கள். பாண்டவர் ஐவரில் படைக்கு நகுலன் என்று பெயர்பெற்ற வீரனை ஏனோ மறந்தனர்! இப்பொழுது தனித்தனிக் கருங்கல்லால் கட்டிய விமானங்கள் போல் ஒவ்வொன்றும் ஒரே கல்லால் செதுக்கப்பட்டிருக்கின்றது. இவைகளை ஆசாக வைத்துக்கொண்டே பிற்காலத்தில் ஆலய விமானங்கள் எடுக்கப்பட்டன. ஆகவே மாமல்லபுர ரதங்களைத் தாய்க் கோயில்கள் என்று கூறினும் பொருந்தும். இவ்வைந்து ரதங்களுக்குமப்பால் சிறிது தூரத்தில் மற்றொரு கல் ரதமும் உண்டு. அதற்குக் கணேச ரதம் என்று பெயர். அதன் மேலமைப்பு இக்காலக் கோபுரவடிவத்தில் அமைந்துள்ளது. ஆகவே கணேச ரதமே பிற்காலக் கோபுரங்களுக்கு ஆசாக அமைந்ததென்று கருதுதல் மிகையாகாது.

ராஜசிம்மன் சிற்பநடை (கி.பி. 674—800) இவன் காலமுதல், பெரும் பாறைகளைக் குடைந்தும் செதுக்கியும் கோயிலமைக்கும் பழைய வழக்கம் போய் மலையைச் சிறுகற்களாகப் பெயர்த்துச் செதுக்கி அடுக்கி கோயில் சமைக்கும் வழக்கம் தொடங்கிற்று. மாமல்லபுரத்திலுள்ள கெய்தற்கோட்டமும் (Shore-Temple) கச்சிமாநகரிலுள்ள கைலாசநாதர் கோயிலும், பானைமலைக் கோயிலும் ராஜசிம்மன் அழகுற அமைத்தான் ‡

‡ இவனுக்குப் பின் வந்த பரமேஸ்வர பல்லவன் எடுத்த கச்சி வைகுந்தப் பெருமாள் கோயிலும் இக்கடையில் கட்டப்பட்டதாகும். "பல்லவர்கோன் பணித்த பரமேச்சுர விண்ணகரமதுவே" என்று திருமங்கை ஆழ்வார் பாடியதும் அதுவே. மேலும் கச்சி முத்தேஸ்வரன் கோயில், மதங்கேஸ்வரன்கோயில், கூர்ம கேஸவப் பெருமாள் கோயில், திருவதி வீரட்டானேஸ்வரன்கோயில், புதுக்கோட்டை குன்றுண்டார் கோயில் முதலியனவும் இக்காலத்திலேயே இக்கடையிலேயே கட்டப்பட்டன.

உயர்ந்த விமானங்களோடும் முன்மண்டப முகமண்டபங்களோடும் சுற்றுப் பிரகாரங்களோடும் இவ்வாலயங்கள் அமைந்துள்ளன. கல்லாற்கட்டிச் சுதையால் அலங்கரிக்கப்பட்டுள்ளன. ராஜசிம்மன் என்னும் பெயருக்கிணங்க இவன் எடுத்தகோயில்களில் எங்கும் பாயும் சிங்கப்படிவங்கள் காணலாம். இக்கோயில்களிலுள்ள சிவலிங்கங்கள் பட்டை தீட்டப்பெற்றுப் பளபளப்பாக விளங்குவனவாம். இவ்வடையாளங்களால் இராஜசிம்மன் கோயில்களை எளிதில் அறிந்துகொள்ளுதல் கூடும். இன்னும் இவன் கோயில்கள் அழகிய ஓவியங்களால் அலங்கரிக்கப் பட்டிருந்தன என்பது சமீபத்தில் புதுச்சேரிக் கல்லூரியாசிரியர் துப்ரீல் (Dubrueil) என்பவர் கைலாசநாதர் கோயிலில் சாந்துப் பூச்சால் மறைபட்டிருந்த ஓவியங்களை வெளிப்படுத்தினமையால் இனிது விளங்குவதாயிற்று.

நந்திவர்மன் சிற்பநடை *:—(800—880) இராஜசிம்மனக்குப்பின் பல்லவச் சிற்பம் சிறிதுசிறிதாக ஏற்றத்திலும் தோற்றத்திலும் குறைவுற்றது. நந்திவர்மன் காலத்திய கற்றளிகள் படுத்த யானைபோல் பார்வைக்குத் தோன்றும். இவற்றை "குஞ்சரம்" † என்று சிற்ப நூலுடையோர் கூறுவர். இக்கோயில்களில் சிங்கத்தூண்கள் காணப்படமாட்டா. விமானத்தின் வெளிச்சுவரில் முப்புறங்களிலும் மாடங்கள் அமைத்து அவற்றில் விநாயகர், விஷ்ணு, பிரமன் முதலிய தெய்வப்படிவங்கள் வைக்கப்பட்டிருக்கும். இவன் காலத்தில் பல கோயில்கள் அமைக்கப்படவில்லை. பல்லவ மன்னர் பீடு அழிந்து பெருமை குன்றினமையால் அவர் சிற்பமும் சிறப்பிழந்து பொலிவழிந்தது போலும். பல்லவர்க்குப் பின்னர்

* சிறப்பாக அபராசிதன் காலத்தில் எடுக்கப்பட்ட திருத்தணி வீரட்டானேஸ்வரர் கோயில் இந்நடையில் அமைந்துள்ளது.

† வராகமிஹிரர் இயற்றிய "பிருகத் சம்ஹிதை" இருபது வகையான விமானங்களைப்பற்றி கூறுகிறது. அவற்றில் சிலவற்றுக்கு 'மேரு', "மந்தாம்," "கயிலாசம்," "நந்தனம்," "பத்மம்," "கருடம்," "குஞ்சரம்," "ரிஷபம்," "ஹம்சம்," "கடம்," "சிம்மம்" எனப்பெயர், F. P. N. Boge "Principls of Indian Silpasastra" p..70.

தஞ்சைச் சோழர்கள் முன்னைய ஆலயங்களைவிடப் பன்மடங்கு பெரிய கோயில்களை எடுத்தார்கள். பல்லவர் கற்றளியிலிருந்தே சோழருடைய சிறந்த கற்கோயில்கள் எழுந்தன என்பது சிற்பநூல் ஆராய்ச்சியில் வல்ல பர்குஸன் (Fergusson) என்னும் புலவர் கருத்தாகும். ‡

பதி பசு பாசப்பனுவல்.

இரண்டாவது

பதி சாதக வியல்.

திரு. L. உலகநாதபிள்ளையவர்கள், தமிழாசிரியர்,
நாட்டுமொழிக் கல்லூரி, திருவையாறு.

*(முற்றொடர்ச்சி துணர் 5. பக்கம் 176.)

ஆதலின் னாகத் தனுவின் பலமறிவன்
வாதையிலை யென்றே மதி (கசு)

ஊகங்கிழ் மேலுமுயிர்க் குண்டொப்பி னும்வினையாற்
போகமாம் புத்திப் புலம் (கஎ)

ஒத்தபொரு ளிற்கிழு முண்டேக மென்மேலும்
புத்திக் கிரையைம் புலம் (கஅ)

---

‡ "History of Indian and Eastern Architecture" p. 339.

கண்டுலகி னுள்ள கடமையதி காரியர்கைக்
கொண்டுவரக் கைகொள்ளுங் கோ (௬௯)

தந்தை புதல்வன் சலிக்கிற் சலிப்பனே
சந்துட் டனுட்டிக்குந் தான் (௭௦)

கீழகம் புத்திக்கே யாகக் கெழுவரிய
மேலாக மெய்ஙன் விளம்பு (௭௧)

தீண்டாதே மேலாகஞ் செல்லுங்காண் புத்திக்குத்
தீண்டியுங்கீ ழகஞ் செலும் (௭௨)

அவகரணங் கீழக மாம்பொழுது புத்தி
சிவகரண மேலாகஞ் சென்று (௭௩)

பஞ்சாசற் பாவகமும் புந்திக்குப் பாங்கவற்றை
யெஞ்சாதே யாகமத்து ளெவ் (௭௪)

உயிர்க்குயிர் மேலா முயிரதன் கீழா
முயிர்க்கீழ்மா யைகருவி யும் (௭௫)

அமலனது சன்னிதியி லார்ச்சித்த கன்மஞ்
சமலருறு வார்தத்து வத்து (௭௬)

ஈசன் விளையாட் டிவையெனலு மாமுயிர்க்குப்
பாச மறுக்கை பலம் (௭௭)

பண்டிதர்க ளின்பத்துன் பத்தாலும் பாற்றுவர்நோ
யண்டனுமிவ் வாறென் றறி (௭௮)

உதவி யிரவி யுலகுக் கிரவிக்
குதவி செயுமோ வுலகு (௭௯)

மெல்லமெல வெல்லாரு முத்தராவார் விமலத்
தில்லைத் தொழில்பின் னெனல் (௮௦)

அலகிலர்சேர்ந் தாரமலன் றுணிழல்சேர் வாரு
முலவாக் கிழிப்பொருட்போ லுண்டு (௮௧)

ஆதலின் லைத்தொழிலு முண்டென் றுஞ் சின்மயன்முன்
சேதமிலை யென்றே தெளி (அஉ)

என்னுவா ரிந்த வியலின் பொருண்முறையா
லண்ணியா ரீசனடிக் கு. (அங)

இரண்டாவது பதி சாதக வியன் முற்றும்.

மூன்றாவது.

பசு சாதக வியல்.

ஆகமியங் காதுசடந் தானே யதுதனையூர்
பாகன் பசுப்பலந்துய்ப் பான் (க)

யாதுண்டா யாதின்று யுண்டில்லைச் சேட்டையுடற்
காதியான் மாவென் றறி (உ)

அத்தியக்கங் காட்சியது தன்னுலா னன்னியமாம்
புத்திபனுப் வாஞ்சையினைப் போட்டு (ங)

படம்போ லறியுப் படும்பரினை மிக்குஞ்
சடமுடலான் மாவறிவான் றூன் (ச)

ஆக்கையுயி ரோவன் னுறக்கத் தறியாது
காக்கையபருங் தும்பொழுதுங் கண் (ரு)

மறந்தாய் நனவைக் கனவின் மதிமுன்
னிறந்தே பிறந்தா யிழந்து (சு)

அடங்கி யதிதத் தறிவுதிக்கு மாங்கே
யொடுங்கிப் பிறப்பினுதிக் கும் (எ)

வளியுமுயி ரன்றுடலின் ம............துறக்கத்
தொளியாதி யையுணரு மோ (௮)

ஐந்து புலனுமுயி ராலறிய வேயடலா
லைந்துபுல னும்மலவான் மா (௯)

அந்தக் கரணமறி யப்படுத லாலுயிரா
லந்தக் கரணமுயி ரன்று (௧௦)

அந்தக் கரண மமைச்சரைப்போ லும்மரைய
னந்தக் கரணமாள் வான் (௧௧)

காட்டு மலர்நிறத்தைக் காட்டும் படிகமுயிர்
காட்டுங் கருவிநிறங் கள் (௧௨)

கன்னின் மனம்போற் கலந்திரண்டற் றேநிலவு
மெண்ணி னுயிர் சேதனமென் றெண் (௧௩)

உடன்மட் டுடலேக தேசியுயி ரென்னிற்
கெடுமளவு பட்டுண்டோ கேடு (௧௪)

எங்கு நிறையி னுயி ரிந்தவுட லைத்தணந்து
தங்குதல்கீழ் மேலென்னீ சாற்று (௧௫)

இருட்டறையிற் றீப மிலங்கியவப் போதோ
பொருட்புணர்ச்சி கண்ணிற் புகல் (௧௬)

உறுங்கரண பேதத்தி னுலே யுயிர்தா
னுறுமவத்தை யைந்துமலத் துற்று (௧௭)

எழஞ்சு மையைஞ்சு மூன்று மிரண்டொன்றுந்
தாழுமுறை யிற்குளமுன் சார்ந்து (௧௮)

உரைத்த வவத்தை யோரைந்துங்....தண்டத்
துரைத்த கருவிமுறை யோர் (௧௯)

விடுவார் பிறப்பாங்கே மேலவத்தை யைந்தும்
படுவார் குரவனுக்காட் பட்டு (௨௦)

ஆக்கையினு முன்மனத்தம் புந்தியினு மாவியினும்
பார்க்கசிவ னிற்கும் படி (உக)

வானடக்கல் போல்வளிமுன் மாதேவன் மன்னுயிர்முன்
ருனடக்கல் காண்கையதி தம் (உஉ)

நனவுடலில் நம்பனையு நாடன் மனமாதி
கனவாதி மேலவத்தைக் கண் (உ௩)

ஒடுங்கா வியாபி யுயிருடலி னுள்ளு
மொடுங்குமெஙன் மாயையினு மோது (உ௪)

ஒடுங்குங் கருவி யுபாதானத் தாவி
யொடுங்கலுப சாரத் துரை (உ௫)

ஒடுங்கக் கருவி யுணவுசெய லாவிக்
கடங்கலிரு ளாற்கே வலம் (உ௬)

கூடக் கருவி குறிப்புற்றி யானெனதென்
ருடுமது வேசகல மாம் (உ௭)

ஊனமற வெல்லா வுயிர்க்குமுயிர்த் தானுணர்ந்து
தானதுவா யின்புறல்சுத் தம் (உ௮)

உயிர்க்குயி ரொன்றே யுயிர்த்திற மூன்றே
யுயிர்நோயோ ரைந்தென் றுணர் (உ௯)

அந்தியம ல்ன்சுத்தன் சச்சிதா னந்த
னெனுதி யுயிர்க்குயிரென் றெண் (௩0)

பெருநோயொன் றுள்ளார் பிரளவர் முன்னோர்
கருணையுள விஞ்ஞா கலர் (௩க)

மலங்கரும மெண்டிரண்டு மண்டலர் முன்னோர்
கலந்த பிலாயா கலர் (௩உ)

சகலர் மலங்கரும மாயையுஞ் சார்ந்தார்
ம......ர.சுராதியரெல் லாம் (௩௩)

மலங்கரும மாயைமா யேயந்தி ரோதம்
விலங்குயிர்க் கிவ்வைந்தும் வேறு (௩௪)

திரோதஞ்சிற் சத்தி சிறியர்க் கிவற்றால்
விரோதஞ்செய் தாக்கும் பின்வீடு (௩௫)

அன்னை கொதித்தடிக்க வல்லற் படுங்குழவி
பின்னவளா லார்வம் பெறும் (௩௬)

ஈசனது சத்திமல மூன்றினையு மேவுதலாற்
பாசமெனும் பேரதற்குப் பாங்கு (௩௭)

ஒத்த வினையின் மலமூல பாகமுறிற்
சத்திபதி யுங்கருணை சார்ந்து (௩௮)

சத்தி பதியுந் தமோமலபா கந்தன்னி
லொத்தவினை யில்லார்கண் ணும் (௩௯)

தேசிகனை யாவேசஞ் செய்தே சிவன்சகலா
பாசமறுப் பானென்று பார் (௪௦)

உயிர்க்குயிரை யோரா னுடல்வெறுத்தா னுள்ளத்
துயக்கந் துடைப்பனோ சொல் (௪௧)

உயிர்க்குயிரை யோர்ந்தானு மூ-வா னுள்ளத்
துயக்கந் துடைப்பனோ சொல் (௪௨)

மெய்யே யுடல்வெறுத்தார்க் குப்பாச வேரறுத்து
மெய்ஞ்ஞானி காட்டுவனுண் மை (௪௩)

இந்த வியலின் பொருளனைத்து மெண்ணுவார்
பந்தமறச் சின்மயம்பார்ப் பார். (௪௪)

மூன்றாவது பசு சாதகவியல் முற்றும்.

377

உ

மூவர் தமிழ்.

(ஆராய்ச்சி)

II தமிழ் மறை.

திரு. சாமி. வேலாயுதம் பிள்ளையவர்கள், B. A., L. T.,
தலைமையாசிரியர், போர்டு உயர்தரப்பள்ளிக்கூடம், குடவாசல்.

IV

மறை, வேதம், இருக்கு, சாமம், ஆறங்கம் என்னுஞ் சொற்கள் ஆரிய நூற்களையன்றித் தமிழ் நூற்களையுங் குறிக்கின்றனவென்று பழைய நூற்களிலிருந்தெடுக்கப்பட்ட பலமேற்கோள்களுடன் விளக்கினாம். இனி இருக்காதி நால்வேதங்களை எப்பொழுது, யாவர், எவ்வாறு இயற்றினாரென்பதையும், இவைகளை இயற்றியதற்கும் தேவாரம் முதலிய தமிழ்மறைகளை இயற்றியதற்கும் மாறுபாடுண்டோவென்பதையும் ஆராய்வாம்.

மறைகள் இருவேறு வகையாக இயற்றப்பட்டவாக இயம்பப்படுகின்றன. ஒன்று, இறைவர் தம்மாலேயே, முதலற்ற பொழுதிலே (அநாதியிலே) இயற்றப்பட்ட தென்பதும் அவற்றிற்கு முடிவில்லையென்பதுமாம்; மற்றொன்று, இறைவர் தாமே இயற்றாது அடியார்களைக்கொண்டு, படைப்புப்பொழுதிலே அல்லது அஃதற்குப்பின் இயற்றினாரென்பதும், அவற்றிற்கு முடிவுண்டென்பதுமாம். இவை இரண்டும் ஒன்றற்கொன்று நேர்மாறுபாடுடையனவாக விருத்தலின் இவற்றுள் ஒன்றே உண்மையாக இருக்கக்கூடுமென்று எண்ண இடமுண்டு. ஆனால் ஆழ்ந்து நோக்குமிடத்து இவை யிரண்டுகொள்கைகளும் உண்மையே யாமென்று காணலாம். எவ்வாறெனின் இவை இரண்டாலும் ஒற்றுமையுடைய இருவேறு பொருள்கள் குறிக்கப்படுகின்றனவென்பதாம்; இப்பொழுது உலக வழக்கிலிருப்பனவாகிய ஆரியத் தமிழ் மறைகள் இரண்டாம் வகையன; இவற்றிற்கு முதலாயுள்ள, என்றும் நின்று நிலவக்கூடிய,

உண்மைகளை, செம்பொருள்களை முதல்வகையன. இவற்றை உணரமாட்டாது இதுபோது வழக்கிலிருக்கும் ஆரியமறைகளை முதல் வகையனவென்று எண்ணி இடர்ப்படுவாரு முளர். அன்னார் தெளிவெய்துமாறு பிற்கண்டவைகளை உற்று நோக்குவாராக :—

I

வேதம் இறைவனாலியற்றப்பட்ட வகையை மாதவச் சிவஞான முனிவர் "மகாசங்கார காலமுடிவின்கண் உலகங்களை மீளப் படைத்தற்பொருட்டுப் பரமான்மாவாகிய பரமசிவத்தினுடைய பராசத்தி குடிலையை நோக்கியவழி, வேதாகமங்கள் குடிலையினின்று நாதவடிவாயும், அதன்பின் விந்து வடிவாயுந் தோன்றின. பின் அவற்றைச் சொற்றொடர்ப் பகுத்துச் செய்யுளாக்கிப் பிறர்க்கு அருளிச்செய்தற் பொருட்டுப் பரமசிவன் ஈசானம் முதலிய பஞ்சப்பிரம மனுக்களாகிய சத்திகளை திருவடி முதலிய அவயவங்களாகச் சகள நிட்களத் திருமேனி கொண்டருளிச் சதாசிவமூர்த்தியாய் நின்று தற்புருடம் முதலிய நான்கு முகங்களால் வேதங்களைத் தோற்றுவித்து........அவைகளை அநந்ததேவர் வழியானே பிரமனுக்கு அருளிச்செய்தார்" என்று கூறுகின்றார். ஆகலின் இப்போது வழங்கும் வேத ஆகமங்கள் படைப்புப் பொழுதிலே அல்லது அதற்குப்பின்னே தான் இயற்றப் பட்டிருக்கக் கூடுமேயன்றி, முதலற்றபொழுதில் இயற்றப்பட வில்லையென்பது தெளிவு.

இவ்வாறு படைப்புப் பொழுதில் இயற்றப்பட்ட நால் வேதங்களும் இப்பொழுது வழக்கிலிருக்கும் இருக்காதி நால் வேதங்களாவெனின் அதற்கும் இடமில்லை. ஏனெனில் இப்பொழுது வழங்கும் வேதத்தில் சீதை, இராமர், கிருஷ்ணரைப் பற்றிக் கூறும் பங்குகளும், சுகமுனிவருக்கு வியாசரால் தெளிவிக்கப்பெற்ற சுகரகசியோபநிடதமும், சனாதனர், அகத்தியர், சத்தியவசாவின் புதல்வர், இராதி தராமுனிவர், பூருசிட்ட முனிகுமாரர், தபோநித்யர், மௌத்கல்யர் புதல்வர், நாகர், முதலிய ஆண்களையும், மைத்ரேயி, கார்க்கி முதலிய பெண்களையும் புகழ்ந்து கூறும் பங்குகளும், அவிமுந்தம், திருப்பருப்பதம், நொடித்தான் மலை, திருக்கேதாரம், திருச்சிற்றம்பலம்

திருவாரூர், பிரயாகை முதலிய கோயில்களைப்பற்றிக் கூறும் பங்குகளும், யமன் மனைவியாகிய ஜான்மாலி என்பவளால் தெளி விக்கப்பட்ட யசுர்வேதப் பங்கும், இன்னும் உலகத்தோற்றத் திற்குப்பின் நடந்த இத்தகைய பல்வேறு செய்திகளும் இருப்ப தால் இவை உலகப் படைப்பிற்காக இறைவனுலியற்றப் பெற்றவேதத்தில் எவ்வாறு காணப்பெறும்?

இன்னும் படைப்புக்காக இவ்விருக்காதி நால் வேதங்களே இறைவனுலியற்றப் பெற்றிருப்பின் வேதங்களைத் 'திரயி' என்று அமரகோசங் கூறுவானேன்? வேத நெறிவரம்பு கடவாது வாழ்ந்த, நேற்றிருந்த, பெரும்புலவர் **மீனாட்சிசுந்தரம் பிள்ளை** 'மும்மை மறையும்' என்று அழுத்திக் கூறுவானேன்? வியாசர் வந்து அவற்றை ஒருவகைத்தேவையும் ஒருவகைப் பாகுபாடு மின்றி நான்காகப் பிரிப்பானேன்? பிரித்த பின்னரும் நச்சினார்க் கினியர் அவை இருக்காதி நான்கல்ல, ஆனல் பௌடிகமும், தைத்திரியமும், தலவகாரமும், சாமவேதமு மாமென்றும் பிங்கலந்தை நிகண்டில் அவை

பௌடிகமும் இருக்கும் முதல் வேதமாகும்
இரண்டாம் வேதம் யசுதைத் திரியம்
மூன்றது சாம வேதந் கிதநடை
நான்காம் வேதம் அதர்வண மென்ப

என்றும் மாறுபடக் கூறுவானேன்? திருமூலனாரும் வேதச் சிறப்பைக் கூறுங்கால் ஓரிடத்தும் நால்வேதத்தின் பெயரைக் குறியாது ஆகமச் சிறப்பில் மட்டும் "நவவாகமமெங்கள் நந்தி பெற்றுனே' என்று கூறியதோடு நில்லாது அவற்றின் பெய ரையும் விரிப்பானேன்? இவையாவும் முதலில் மூன்ருயும் பின்னர் ஒரு நான்காயும், அதன் பின்னர் வேறொரு நான்காயும் இவ்வாறு பொழுதிற்கொரு மாறுபாடடைவது இவ்வேதமென் றன்றோ தெரிவிக்கின்றன! இவ்வாறு மாறுபடுவது "பழையன கழிதலும் புதியன புகுதலு" மாய பொழுதின் செயலின லன்றோ? இவ்வாறு கழிதல் கடல்கோளாலும், வழக்கழிந் தொழிதலாலும் கரையான் அரித்தலாலும் ஆமென்பதை

அகத்தியம், இசை நுணுக்கம், பூதபுராணம், தேவாரத்தின் பெரும்பகுதி முதலிய தமிழ் நூல்களின் முடியிலிருந்து தமிழ் அறிஞர் நன்குணரலாம். அவ்வாறொழியவே புதியனபுகுதலை இறையனாரகப்பொருள், தொல்காப்பியம், நன்னூல் முதலிய நூற்களின் வரலாற்றிலிருந்து அறிந்துகொள்ளலாம். இவ்வாறு மாறிப் புதிதாக உண்டாகும் நூல்களைத் தொகுக்கவே சங்கங்களேற்பட்டுப் பத்துப்பாட்டு, எட்டுத்தொகை, பதினெண் கீழ்க்கணக்கு என்னுந் தொகுதிகளை உண்டாக்கின போலும். வியாசர் வேதங்களைத் தொகுக்க "மூன்று முகந்தொறும் வந்துதிப்பர்" என்று இலிங்கபுராணம் கூறுகின்றது. இவ்வாறாய தொகுதிகளில் இருக்குஞ் சாமமும் இருதொகை வேதங்களென்பதை முற்காட்டியபடி தேவாரம் முதலிய அருள் நூல்களில் இருக்குஞ் சாமமும் பிரித்தோதப் பெற்றிருப்ப, ஏனைய சிறந்த யசுரும், அதர்வணமும் யாண்டுங் கூறப்பெறா தொழிவதும், இவ்விரு சொற்களையும் மறைமொழி, இசை என்னும் பொருள்களிற் பயன் படுத்தியிருத்தலும், மேற் கண்டபடி வேதப்பெயர் மாறுபாடுகளிலெல்லாம் இவ்விரு பெயர்களும் பெரும்பாலும் மாறுபடாது வருவதும், அவ்வேதங்களின் பங்குகள், பல இருடிகளால் இயற்றப் பெற்றதாகக் கூறப்படுவதுமே நிலை நிறுத்தும். இவ்வாறு தொகுக்கப்பட்டன சிறிதுபொழுது நின்று நிலவிப்பின் இறந்துபடல் இயற்கையே. இறந்துபடலும் வேறு வேதங்களைத் தோற்றுவிப்பன் இறைவன் என்பது எண்ணத்தகுந்ததே.* இவ்வாறு இன்னும் பலவேதம் இயற்றப்பட விருத்தல்போல முன்னும் பலவேதம் அழிந்திருப்பதும் இயல்பே! இவ்வாறு மக்கள் தோன்றி நின்றழியினும் மக்கட்டொகுதி நிலைபெற்றிருத்தல்போல, வேதங்கள் ஒவ்வொன்றாக அல்லது பலவாகத் தோன்றி நின்றழியினும் வேதத்தொகுதியே முதல் முடிவில்லாததென்பதும், இவ்வாறு தோன்றி நின்றழியும் வேதங்களின் உண்மைகள் மாறுபடாதனவென்பதுமே வேதம் முதலீறில்லாததென்பதன் உண்மைப்

* ஈண்டு, திருமறைக் காட்டுக் கோயில் வரலாற்றிலிருந்து முதலில் வேதந்தமிழிலிருந்து பின் ஆரியத்தில் உண்டாக்கப்பட்டதாக முன் எடுத்துக்காட்டியதை உளங்கொள்க.

பொருள்போலும். இப்பொருளையே சுவாமி விவேகாநந்தரும் தமது சிக்காகோ (Chicaga) செறிப்பாராளுமன்றச் (Parliament of Religions) சொற்பொழிவிலுங் கூறுகின்றனர் * இப்பொருளையன்றி இதுபோது வழங்கும் ஆரியவேதமே, அப்படியே, ஒருசொல்லும் மாறாதுவிளங்கி, வழக்கொழிந்து மறுபடியும் முன்போன்று வந்து விளங்குமென்பது நகையாடுதற்கிடனும். இஃது அப்பரடிகள் 'பாடுமே ஒழியாதே நால் வேதமும்' ‡ என்று கூறியதற்கிணங்க இறைவன் இவ்விருக்காதி நால்வேதங்களையே திருப்பித்திருப்பி, திருப்பித்திருப்பி ஒரு சிறிதுந் தெவிட்டாது ஓதிக்கொண்டிருப்பனென்று அவன் வரம்பில் ஆற்றலுக்கு வேறுவேதம் (நூல்) இயற்ற இயலாதென்னும் வரம்பு கற்பித்தல்போலாம்! இறைவனின் திருவருட்டிறலில் ஒருதிவலையே பெற்று 16, 81, 18 ஆண்டுகளே வாழ்ந்த சம்பந்தர், அப்பர், சுந்தரர் ஆகிய மூவரும் அருள் பெறுப்பொழுது, ஊண், உறக்கம், வழிச்செலவு, அடியார் கூட்டுறவு முதலிய பொழுதுபோக்கு நீக்கி எஞ்சிய சிறிய பொழுதில் 16,000, 49,000, 36,000 பதிகங்களியற்றியிருக்க, அவைகளிப்போது வழக்கிலிருப்பின் இதுபோதுள்ள தேவார அடங்கன் முறையிலும் 174 பங்கு பெரிதாயிருக்கக்கூடிய நிலையிருக்க, அவை பல அடங்கன்முறை ஐயாவாலும் செட்டுறுப் பண்ணக்கூடாத அளவு வாய்ந்திருக்க, அவ்வாறே அருணகிரி நாதரொருவர் இயற்றிய திருப்புகழ் 16,000 ஆகலின் இப்போதுள்ள நூலினும் 13, 14 மடங்கு பருமன் வாய்ந்திருக்கக்

---

* அஃதாவது :—வேதங்கள் முதவீறற்றனவென்று வேதநெறியினர் நம்புகின்றனர். உங்களுக்கு இது எள்ளுதற்கிடனாகும். ஆனால் வேதம் என்னும் சொல்லால் ஒரு நூலுங் குறிக்கப்படவில்லை. அச்சொல் பலரால் பலபொழுதுகளில் கண்டு பிடித்துத் தொகுக்கப்பட்ட உண்மையான உயிர்ச் சட்டங்களையே குறிக்கிறது. எவ்வாறு புவிக்கவர்ச்சி என்னுஞ் சட்டம் (Law of Gravitation) கண்டு பிடிக்கப்படுவதன் முன்னுமிருந்தது, ஒருவராலுங் கண்டு பிடித்திராவிடினும் இருந்திருக்குமோ அவ்வாறே உயிரைப்பற்றிய உண்மைகளுமாம். உயிருக்கும் உயிருக்கும், உயிருக்கும் கடவுளுக்கும் உள்ள ஒற்றுமை வேற்றுமைகள் கண்டுபிடிப்பதற்கு முன்னுமிருந்தன, கண்டுபிடிக்கப் படாவிடினும் இருந்திருப்பன.

‡ அப்பர்—திருத்தாண்டகம்.

கூடிய தன்மையுடையனவாயிருக்க, தன்வயத்தனுதல், தூய உடம்பினனுதல், இயற்கை யுணர்வினனுதல், முற்று முணர்தல், இயல்பாகவே கட்டுக்களினீங்குதல், பேரருளுடைமை, முடிவிலாற்றலுடைமை, வரம்பிலின்பமுடைமையாகிய எண்பண்புகளையுமுடைய இறைவன் ஊழி ஊழியாகப் பாடுபட்டு ஒழியாதே பாடியது, இப்போதுள்ள அந்தணர் உள்ளத்து அடங்கக் கூடிய, மிகச் சுருங்கிய அளவையுடைய இந்நால்வேதமே என்று கற்பிப்போர் இறைவன் மாட்டு எவ்வளவு பெருமை வைத்திருக்கின்றனரென்பது சொல்லாமலே விளங்கும்!

பின் ஊழி முதலில் படைப்பிற் கடிப்படையாய் இயற்றப் பட்ட வேதம் யாது தானென்னின் அது படைப்பிற்கு முதலாயிருக்கக்கூடிய ஒரு திறல் (சக்தி) ஆகுமேயன்றி ஒரு நூலாயிருத்தல் எங்ஙனம் இயலும்? ஒரு நூலாலும் படைப்புத் தொழில் நடப்பதைக் காண்கிலம்; அந்நூல் குறிக்கும் திறலால் ஆகக்கூடும். இதன் உண்மையை வேதத்தின் பெருமையைக் கூறும் ஒரு வரலாறு நன்குவிளக்குகிறது; அதன்படி முன்னொருகால் சோமுகன் என்னும் அசுரன் வேதத்தைக் கவர்ந்து சென்று கடலில் ஒளித்தானென்றும் அதனால் உலகம் நடவாது போயிற்றென்றும், அதைத் திருத்தத் திருமால் மீன் வடிவு எடுத்து அவனைக்கொன்று வேதங்களை மலரவனுக்குக் கொடுத்து உலகப் படைப்பை நடத்தச் செய்தனரென்றும் படித்திருக்கிறோம். ஈண்டுக் குறிக்கப்பட்டவேதம் அந்தணர், மலரவன் முதலியோர் அறிவில் விளங்கக்கூடிய இருக்கு முதலிய வேதங்களாகா; இவை எழுதப்பட்ட ஏடுகளுமாகா, இவ்வ "சுருதி" என்னும் பெயருடன் கேட்கப்பெறும் நூலேயன்றி எழுதிப் படிக்கத் தகும் நூலன்றாதலின்.* எனவே சோமுகன் கவர்ந்தவேதம்

* திருவள்ளுவமாலையில் கோதமனுர் கூறுவதாவது :—"ஆற்றலழியுமென் றந்தணர்கள் நான்மறையைப், போற்றியுரைத் தேட்டின் புறத்தெழுதார்" என்பதாம். ஏனெனில் இதன் ஒலிவடிவு மாறிவிடுமென்பதே யாகும். வேதம் கேட்கப்படுவது என்பதற்கு உட்பொருளும் ஒன்று உண்டு. என்னெனின் வேதத்திற்கு முதலாய 'நாதம், விந்து' என்னுந் தத்துவங்களை இறைவனருளால் கேட்கக் கூடியோரே தத்தம் மொழியில்வேதம் இயற்றவல்லவர் ஆவர் என்பதாம். இவ்வாறே தமிழ்மூவர் முதலியோர் தமிழ் மறைகளை இயற்றியுளர்.

உலகப் படைப்பிற்கு இன்றியமையாதபொருள் அல்லது திறல் என்பதும் ஒடுங்கிக்கிடந்த அதனையே இறைவன் ஊழி முதலில் தோற்றுவித்தானென்பதுங் விளங்கும். இப்பொருளையே திருமாலின் மீன் வடிவு ஓவியத்தில் (மச்சாவதாரப் படலத்தில்) ஓவியக்காரர் நான்கு குழந்தைவடிவுடன் காட்டியிருக்கின்றனர். இத்திறலே மக்கள் வடிவெடுத்துத் திருமறைக் காட்டில் இறைவனை இறைஞ்சியதாகவும், ‡ இத்திறலையே விண்ணவர் அம்பாக எய்தபோது எதிரிகள் அவற்றைக் கவர்ந்ததாகவும் பழ வரலாறுகள் கூறுகின்றன. ஆதலின் இப்பொழுது வழக்கிலிருக்கும் ஆரியவேதம் முதலற்றபொழுதில் இயற்றப்படவில்லையென்பதும், ஊழி முதலில் இயற்றப்பட்ட (உலகப் படைப்பிற்கு முதலாய) வேதமும் இவையல்லவென்பதும், இவை இராமர், கிருட்டினர், சுகர் முதலியோர் பொழுதிற்குப்பின் அல்லது அப்பொழுதில் இயற்றப்பட்டனவென்பதும், முதலற்றவேதம் இவற்றினுள்ள உண்மைகளென்பதும், ஊழி முதலில் படைக்கப்பட்டது ஒருவகைத்திறல் என்பதும் விளங்கும்.

II

இனி இவ்வேதங்கள் யாரால் இயற்றப்பட்டனவென்பதை ஆராய்வாம் :—(1) முற்காட்டிய மேற்கோளில் சதாசிவ மூர்த்தியே அநந்ததேவர் வழியானே வேதங்களை மலரவனுக்கு அருளிச் செய்தாரென்று கண்டோம். பின் அவை மலரவனிடமிருந்து மக்களுக்கு வந்த வழியை ஒருவருந் தெளிவித்ததாகத் தெரியவில்லை. இவ்வாறே இவ்வேதங்களுடன் தோன்றிய ஆகமங்களின் வரலாறும் இருக்கிறது, முற்கூறிய சிவஞான முனிவரே கூறுவதைக் காண்க :—“ அப்பரமசிவனே சதாசிவ மூர்த்தியாய் நின்று ஈசானம் முதலிய ஐந்து திருமுகங்களானும் காமிகம் முதலிய இருபத்தெட்டு ஆகமங்களைத் தோற்றுவித்து வித்தியேசர் எண்மரின் முதலாய அநந்ததேவருக்கு அருளிச்

‡. திருமறைக் காட்டுக் கோயில் வரலாற்றிலும் இத்திறலே தமிழ் வடிவுடனிருந்து பின் மக்கள் வடிவு தாங்கி வணங்கியதாக முன் எடுத்துக் காட்டினும்.

செய்தான். அவற்றை அநந்ததேவர் நூற்றுப் பதினெட்டு உருத்திரரின் முதல்வராகிய சிகண்ட ருத்திரருக்கு அருளிச் செய்தார். அவற்றை சிகண்ட உருத்திரர் கணங்கட்கும், தேவர்க்கும், முனிவர்க்கும் அளித்தற்பொருட்டு முதற்கண் நந்திப்பெருமானுக்கு அருளிச்செய்தார்" என்று முடிக்கின்றனர். ஈண்டும் நந்திதேவரிடத்திருந்து அவ்வாகமங்கள் விண்ணவர்க்கும், முனிவர்க்கும் பின் மக்களுக்கும் எவ்வாறு வந்ததென்பதை ஒருவருங் குறித்ததாகத் தெரியவில்லை. ஆதலின் இறைவரியற்றிய வேத ஆகமங்களே நேரே மக்கள் கைக்கு வழிவழியாக வந்ததென்று நிறுவக் கூடவில்லை.

(2) எனினும் இவ்வாகமங்களின் சாரங்கொண்ட சைவ சித்தாந்தத்தின் உறுசுவையாம் தமிழ்ச் சிவஞான போதத்தின் வரலாற்றைச் சிவஞான முனிவரே கூறுகிறபடி "நந்திதேவர் சனற்குமார முனிவர்க்கும், அவர் சத்திய ஞான தரிசனிகளுக்கும், அன்னார் பரஞ்சோதி முனிவருக்கும், அவரே மகனாகிய மெய்கண்ட தேவருக்கும் அருளினர்" என்பதுபோல் ஏனைய ஆகமங்களுக்கும் அவற்றின் பலப்பல பங்குகளுக்கும் வரலாற்று வரிசை இருந்திருக்கக் கூடுமென்று பலர் நினைக்கக் கூடும். அவ்வாறு பெரும்பகுதி காணப்படவில்லை; காணப்படினும் வேறுவகையாகவும், மாறுபாடாகவுங் காணப்படுகிறது. எவ்வாறெனின் "சைவ ஆகமங்கள் இருபத்தெட்டனுள் இருபத்து நான்காவது ஆகமமாகிய சந்தான சர்வோத்தமத்தின் உபபேதம் பதினொன்றினுள் எட்டாவதாகிய சிவதருமோத்திரம் என்னும் நூல் முற்கண்டபடி நந்தி முதலியோர் வழிவராது தனிவழியாக முருகக் கடவுள் அகத்தியருக்குச் சொன்னதாகச் சொல்லப்படுகிறது. இவ்வாறு மாறுபாடுகள் பல காணப்படுதலின் வேதாகமங்களை இறைவன் இயற்றினனென்றல் வேந்தன் கோயிலைக் கட்டினனென்றல் போலும்!

(3) ஆரிய வேதங்கள் (தமிழ் மறைகள் போன்று) தம்மை ஆக்கியோன் பெயரைத் தாமே கூறுகின்றன. பிரசாபதி, பிரமன், ஆசுவலாயனர், அநுமார், யாஞ்ஞவற்கியர், தத்தாத்திரேயர், வருணன் முதலியவர்களால் இயற்றப்பட்டதாகக் கூறும் பங்குகள் சில பல. இவ்வாறு வெளிப்படக் கூறும்

பொருளை மறைப்பதற்காகப் "பழைய கற்பங்களில் பிரமத்தால் வெளியிடப்பட்ட சுருதிகளையே பின்னர் பலப்பல இருடிகள் தம் வாக்குப் போலக் கூறினர்" என்று யசுர்வேத சாகை கூறுகின்ற தென்பாருமுளர். இக்கூற்று இறைவனாலேயே சொல்லப் பட்டிருக்க முடியாதாகலின், தம் கூற்றை இறைவன் கூற்றாகப் பலர் கொள்ளுமாறு ஒருவர் இயற்றி வைத்ததாகக் கொள்ளலேபொருந்தும். அவரும் அவரைப் போன்றவருமே ஏனைய பங்குகளையும் இயற்றுவித்திருத்தல் வெள்ளிடை. இவ்வுண்மை யறிந்தே சிவப்பிரகாசனார் இருக்காதி வேதங்களை "காரணன் மொழியெனும் ஆரண மொழியோ" அதாவது இறைவன் கூற்று என்று சொல்லப்படுகிற, எனவே உண்மையில் அல்லாத வேதமோ என்னும் பொருள்படக் கூறினர். எனவே ஆகமம் வந்தவழி கூறுமிடத்து சுவாயம்புவத்தில் "சுத்த வித்தையில் எழும் அருள் நாத ஒலியாகிய ஓங்காரத்தின் வாயிலாக உவமையிலாக் கலைஞானத்தை உதவ அங்ஙனம் உதவப்பெற்றோர் இயற்றிய நூலே ஆகமமாம்" என்று கூறியுள்ளபடி இறைவனருளால் வழிபாடு செய்ததின் பயனாக அடைந்த அறிவு விளக்கத்தை நூலாக வெளியிடும்பொழுது இறைவன் கூற்றாகக் கொண்டு கூறியிருத்தல் இயற்கையே. இவ்வாறு இறைவனால் நேரில் இயற்றப்படாதிருப்பினும் இவ்வாரியவேதம் அறுபத்து நான்கு அறிபொருள்களுள் ஒன்றாதலானும், அவ்வறி பொருள்களாலறிபடு பொருள் அவனேயாதலானும் அப்பொருளை அவனறிவித்தாலன்றி அறியும் ஆற்றல் உயிர்களுக்கு இலதாதலானும், அவனே 'வேத முதல்வ' னாகி இருடிகள் தேவர்களாகிய தக்க வாயில் வகுத்துக் கொண்டு அவர்களுக்குத் தக்க உணர்வூட்டி 'வேதம் நான்கையும் விரிவித்ததனாலும் அவனே இயற்றியதற் கொப்பாம். இவ்வுண்மை நோக்கியே 'மிக்க வேத மெய்ந்நூல் சொன்னவனே' என்று மணிவாசகனாரும், 'வேதமொடாகமம் மெய்யா மிறைவனூல்........நாதனுரையவை' என்று திருமூலனாரும் திருவாய் மலர்ந்ததன்றி "இருக்குவேதம், யசுர்வேதம், சாமவேதம் முதலியன இந்தப் பரம்பொருளின் சுவாசம்" என்று பிருந்தாரணிய உபநிடதமுங் கூறுவதாயிற்று.

(4) இவ்வாறு யாவற்றையும் இறைவன் விளக்குவதால் நூல்கள் எழும் வகையை நன்குணர்ந்த தேவார முதல்வர்கள் வேத ஆகமங்களுடன் நில்லாது அங்கமாறும் பதினெண் பழ வரலாறுகளும் இறைவனாலேயே இயற்றப்பட்டனவென்றியம்பு கின்றனர்.

'பங்கமில் பதினெட்டொடு நான்குக் குணர்வுமாய்
அங்கமாறுஞ் சொன்னா னுமையாறுடை யையனே'

என்றவிடத்து அங்கமாறுஞ் சொன்னவன் இறைவனேயென்று குறிப்பிடினும் இதுபோது வழங்கும் சிக்ஷையும், வியா கரணமும் பாணினியாலும், சந்தம் பிங்கள முனிவராலும், நிருத்தம் யாஸ்கமகா இருடியாலும், சோதிடம் ஆதித்தியர் களாலும், கல்பம் ஆச்வலாயனர், காத்யாயனர், ஆபஸ்தம்பர், போதாயனர், வைகானசர், த்ராஹ்யாயனர், பாரத்வாஜர், சத்யாஷாடர், இரண்யகேசி முதலியோராலும் இயற்றப்பட்ட தாகத் தெரிகிறது.* இவற்றை இறைவனே தம் வாயாற் கூறினர் என்று கூறுவோரிலர். இவ்வாறே பதினெண் புராணங் களும் 'பதினெட்டொடாறும் விரித்தாற்கிடம்........கேதாரமே' † என்ற ஆளுடைய பிள்ளையார் வாய்மொழியின்படி இறைவ ராலேயே இயற்றப் பட்டனவாக எண்ண இடமுண்டேனும் அவற்றின் வரலாற்றை நோக்குமிடத்து அவை "ஸ்ரீசிவ மூர்த்தியிடம் இவைகளைக் கேட்ட நந்திமாதேவர் சனற்குமார முனிவருக்கு உபதேசிக்க, அவர் வியாசருக்கு உபதேசிக்க, வியாசபகவான் சூதருக்கு உபதேசித்தனர்" என்றும் "இப் புராணங்கள் கிருதயுகத்து பிரமதேவரால் (இயற்றப்பட்டு) பிரமமென ஒன்றாகி நூறுகோடி கிரந்தங்களாயும், திரேதா யுகத்து இருடிகளால் கோடி கிரந்தங்களடங்கிய, நூற்றுப் பதினெட்டுச் சங்கிதைகளடங்கிய பதினெட்டு வகையினவாகவும் துவாபரயுகத்து வியாச பகவானால் நான்கு லக்ஷத்து எண்ணா யிரங்கிரந்தங்களடங்கிய பதினென் புராணங்களாயின" என்றும் அபிதான சிந்தாமணி கூறுகின்றமையால் இப்புராணங்களை அருள் சுரந்தியற்றுவதற்கு வேண்டிய அறிவு விளக்கத்தை

* அபிதான சிந்தாமணி † பண்செவ்வழி-திருக்கேதாரம்-2வது பாட்டு.

உண்டாக்கியவர் இறைவராகக் கொள்ளப்பட வேண்டுமேயன்றி அவைகளைத் தம்மொழியால் நேரே இயற்றியோர் இறைவரென்று கொள்ளற்குச் சிறிதும் இடமின்றென்பது தெளிவு. இதற்கிணங்கவே ஆளுடைய பிள்ளையார் "வினைமிகு வேத நான்கும் விரிவித்த நாவின் விடையான்" * என்றும் ஆளுடைய வேந்தர் "ஓதாதே வேதம் உணர்ந்தாய் போற்றி" ‡ எனவுங் கூறியுள்ளார்.

(5) இவ்வுட்பொருளை உணர்ந்த, தானென்பதற்ற, பண்டைப்பெரியோரிற் பலர் தம்பெயரைத் தாமியற்றிய நூலின் கண் பொறித்துவையார். 'சரநூல்' என்னுமோர் தமிழ் நூலியற்றிய பெரியாரொருவர் தம் பெயர் யாதென ஒருவருக்குந்தெரியாதபடி விட்டதோடு நில்லாது, அந்நூன்முன்னுரையில் உமை 'சந்திரபானிலக்கணமுங், கோளும், நாளும், தயங்கிய பக்கங், கரணம், யோகம், வாரம்,—வந்து சொலுங் கிரகணத்தை யறியாதார்கள், மனநினைவா லறியும்வகை, உளதோ? வென்ன' ....சரநூல் தன்னைப் பரிந்து நீ பார் என்று பரமன் அந்நூலைச் சொன்னதாகக் கூறுகின்றார். இதனால் அந்நூலை இறைவனே தம்வாயால் இயற்றியுளனென்று கூற முன் வந்த பேரறிஞர் ஒருவரையுங் கண்டிலேன்! இவ்வாறே வடமொழிச் செம்பொருள் நூல்களிற் சிறந்த, இதுபொழுது வழங்கும் 'பகவத் கீதை'யை அம்மாயோன் அருச்சுனர்க்கு அருளிய பொழுது அருகிருந்து குறுஞ்சுவடியால் (Short Hand) ஒரு சொல்லையும்விடாது எழுதித் தக்க செய்தியாளர் (நிருபர்) வெளியிட்டாரென்று உறுதியாய்க்கூற ஒருவருந் துணிந்திலர்! எனினும்வேதம், ஆகமம், புராணம், சரநூல், பகவத்கீதை முதலிய நூல்களைக் கடவுளே இயற்றினரென்னும் இக்கருத்துக்களை ஒரு சிறிதும் சுவைக்காது விழுங்குவோர் பலருண்டெனக் கண்டே, இப்பொழுது 'குமார காண்டம்' எனவும் 'சப்தரிஷி வாக்கியம்' எனவும் பலபெயர் புனைந்து பெண்களின் ஒப்பாரி

---

* பண்பியந்தைக் காந்தாரம்—திருநன்பள்ளி—10-வது பாட்டு.

‡ திருக்கைலாயம்—போற்றித் திருத்தாண்டகம் (முதல்,) 11-வது பாட்டு.

போன்ற பல கட்டுரைக் கவிகளாலான வரும்பொருளுரைக்கும் நூற்கள் பல எழுந்து விளங்குவதைப் பட்டோரறிவர். இந் நூல்கள் மெய்யாகவே குமரக் கடவுளாலும், ஏழு முனிவர் களாலும் (அன்னர் எழுவரும் வரிசையாக ஒவ்வொரு பாடலியற் றினரோ அன்றி இரட்டையர்போல் ஒவ்வொருவர் ஒவ்வொரு பங்கு, எழில் ஒருபங்கு இயற்றினரோ, அறியேம்) இயற்றப் பட்டனவே என்று நம்புவதுபோலும் வேதங்களை இறைவனே தம் திருவாயாலருளிச் செய்தனனென்று நம்புவது!

எனவே இடும்பைக்கோரிருப்பிடமாகவுள்ள ஒரு புலவன், கொடைக்கோர் கொள்கலனாக விளங்கும் ஒரு தலைவன் மாட்டு, தன்னுள்ளத்துவகை, மருட்கை முதலியவற்றை ஏற்றி அவன் (தலைவன்) பட்டதாகப், பலதிறப்படப்பாடும் அகப்பொருட் டுறை, புறப்பொருட்டுறைபோலும், இறைவனியற்றியதாகவும் குமரன் முதலிய கடவுளரியற்றியதாகவும் கூறப்பெறும் இம் **மறைத் துறை.***

III

இவ்வாறு பண்டைப் பொழுதில் வாழ்ந்த பெரியார் பலர் தம் இயற்பெயரை வெளியிடாது காரணப்பெயரையோ அல்லது ஒரு விண்ணவர் பெயரையோ புனைந்துரைப்பாராக, அண்மைப் பொழுதில் வாழ்ந்த பெரியார்கள் தம் காரணப் பெயரையோ அல்லது இயற்பெயரையோ இடுவாராயினர். எனினும் இந் நூல்களும், விண்ணவர்களாலியற்றப்பெற்ற பண்டை நூற்களை

* இவ்வாறு மறைத்துறையாகக்கொண்டு கூறப்படலால் ஒரு நூல டையுஞ் சிறப்பிற்கன்றிப் பயனுக்கும் அளவில்லையென்பது யாவரும் பட் டறிந்ததொன்றும். உட்பொருளையறியாது சொற்பொருளைமட்டும் அறியக் கூடிய பொதுமக்கள் இவ்வாறு மேம்பாடடைந்த நூலையன்றி அதன் கருத்துக்களையுங் கட்டளைகளையும் பொன்னேபோற் போற்றித் தலையாற் றாங்கிப் பின்பற்றி வருவது அதன்பால் வைத்த, ஏற்றமான மதிப்பினா லன்றோ? இம்மதிப்பைக் குறைப்பதற்காக இவ்வாராய்ச்சி வெளிப்படுத்தப் படவில்லை, ஆனால் இதை மூட நம்பிக்கையென்று இகழக் கூடிய சில புது ஆராய்ச்சியாளருக்கெனவே இது இயம்பப் பட்டதாகும்.

ஒப்பப் போற்றத் தகுந்தனவே என்று பலரும் மதிக்குமாறு, இவைகளும் ஊழிக்கு முன் மேருமலை அல்லது வெள்ளிமலையில் விண்ணவர்களாலேயே பொறித்து வைக்கப் பட்டனவென்று, அறிவுடை உட்கருத்து பொதிந்த, பல வரலாறுகளைக் கற்பிப் பாராயினர். இவ்வாறே மேருமலையைக் கொண்டு ஏடாகவும், தமது கொம்பொன்றை எழுத்தாணியாகவும் மகா பாரதத்தைப் பிள்ளையாரே எழுதிய வரலாறு ஒன்றும், * வெள்ளியங்கிரியில் தேவாரம் பொறித்துவைக்கப்பட்ட வரலாறு ஒன்றும் † நின்று நிலவுகின்றன. இவ் உண்மை எவ்வாறாயினும் இக்கொள்கை பிறந்து நாளாக நாளாகத் தடிப்பெய்துவதாலும், உண்மையான ஆக்கியோனைப் பற்றிய நினைப்பு வரவாக் குறைந்து வருவதாலும் இக்கொள்கை நிலைத்து வருகின்றது. இவ்வாறே பெரும் பான்மை வேதமும் சிறுபான்மை ஆகமமும் சிறப்பெய்தி யுள்ளனவென்பது ஒருதலை. அத்தகைச் சிறப்பு ஆறங்கம், புராணம், தேவாரம் முதலியவற்றிற்கு முறைப்படி குறைந்து வந்திருக்கிறது.

எனினும் தேவாரமும் வேதங்களைப் போலவே 'எல்லை யிலா மறைமுதலும்,' 'தேவரும் எழுதவொணாத மறை'யும் ஆகிய நாதவிந்துக்களை உணர்ந்தவர்களாலேயும், இறை வழி பாடு செய்த பெரியார்களாலேயும், அவனருளாலே அவன்றாள் வணங்கி 'எனதுரை தனதுரையா' $ உணர்ந்தவராலேயும், 'பந்தமறுத் தாளாக்கிப் பணிகொண்டாங்கே பன்னிய நூற் றமிழ் மாலை பாடுவித்த' †† மையை அறிந்தவராலேயும், 'நமக்கு மன்பிற் பெருகிய சிறப்பின் மிக்க—வர்ச்சனை பாட்டே யாகு மாதலான் மண்மேனம்மைச்—சொற்றமிழ் பாடு ‡‡ என்றும்

---

* 'ஏடாக மாமேரு வெற்பு ஆக வங்கூர் எழுத்தாணிதன், கோடாக எழுதும்பிரான்' என்னும் வில்லி பாரதக் காப்புச் செய்யுளைக் காண்க.

† சுவாமிநாத பண்டிதரின் தேவாரப்பதிப்பின் முன்னுரையில் காண்க. இவ்வரலாறு சிவ ரகசியத்திலிருந்து எடுத்ததாகக் கூறப்பட்டுளது.

$ சம்பந்தர்-குறிஞ்சி-திருவிலம்பையங்கோட்டூர்-எல்லாப் பாடல்களிலும்.

†† அப்பர்-திருத்தாண்டகம்-திருச்செங்காட்டங்குடி-4வது பாட்டு

‡‡ பெரிய புராணம்-தடுத்தாட்கொண்ட புராணம் 70வது ,,

'என் பெயர் பித்தனென்றே பாடுவாய்'* என்றும், 'தில்லை வாழந்தணர்த மடியார்க்கு மடியே னென்றெடுத் திசைப்பா மொழி' † என்றும் இறைவனே நேரிற்கட்டளை யிட்டருளிய படி பாட்டு மழைப் பொழிந்தவராலும் இயற்றப் பட்டதால் இறைவர் கூற்றுக்கு ஒப்பாம். இக்கருத்தையே மிக்க உறுதி யுடன் யாழ்ப்பாணப் பெரியாருட் பெரியாராகிய ஆறுமுக நாவலர் அவர்கள் தமது சைவசமயநெறி உரையில் § "தமிழ் வேதங்களும், தமிழ்ச் சித்தாந்தங்களும் பசுகரண நீங்கிச் சிவ கரணமுற்ற உண்மை நாயன்மார்களால் அருளிச் செய்யப் பட்டமையால் பதிவாக் கெனவே துணியப்படும். இஃதறியாது பசுவாக்கென நினைப்பினும் நரகத் துன்பமெய்துதல் சத்திய மென்பது தெளிவாக" என்று கூறுகின்றார்.

இவ்வாறு ஆக்கப்பட்ட வகையில் ஒருமைப் பாடுடைய வடமறை தென்மறையாகிய இவ்விரண்டையும் ஒப்பநோக்காது வடமறையிலிருந்தே தென்மறை தோன்றிற் றென்பார் சிலர். அவருக்குத் தக்கவிடை முன்னர்க் கூறியுள்ளாம். வேறு சிலர் திருஞானசம்பந்தரை இருக்குமொழிப் பிள்ளையார் †† என்று சேக்கிழார் செப்பியதைக் கொண்டும், அவர் பதிகங்களுள் ஒரு சில திருவிருக்குக் குறள் என்றழைக்கப் படுவதைக் கொண்டும் பொதுவாய் அவர் பாடல்களும் சிறப்பாய் இப்பதிகங்களும் "இருக்குவேதப் பொருளை அடக்கிக் கொண்டிருக்கின்றன" ‡‡ வென்றுகூற முன் வருவர். இருக்குவேதத்திற் சொருபொருளும் யசுர்வேதத்திற்கு மற்றொருபொருளும், ஏனைய வேதங்களுக்கு அவ்வாறே வெவ்வேறு பொருள்களும் இருப்பதாகக் கூறியதை யாண்டுங் காண்கிலன். அல்லது இருக்குவேதம் சுமார்த்தர்

* பெரிய புராணம் தடுத்தாட்கொண்ட புராணம் 73வது பாட்டு

† ௸ ௸ 199வது ,,

§ சைவ சமயநெறி-77 பக்கம்

†† திருஞானசம்பந்தர் புராணம் 289வது பாட்டு

‡‡ திரு. மா. சாம்பசிவம் பிள்ளை இயற்றிய திருநான்மறை விளக்க ஆராய்ச்சி-55-ம் பக்கம்.

களுள் ஒருவகையினருக்கு ஏற்பட்டதுபோல் சம்பந்தர் தேவாரமும் ஒரு வகுப்பினருக்கென்றே ஏற்படவில்லையென்பது தெளிவு. அன்றியும் முன் காட்டியுள்ளபடி இருக்குவேதத்தில் கூறப்பட்டுள்ள வேள்விகள், விண்ணவர், நிறை மொழிகள், நெறிகள், வரலாறுகள், செம்பொருள்கள், ஆளுடையபிள்ளையார் தேவாரத்துச் சிறிதே கையாளப்பெறும் இத்தேவாரத்துட் கூறப்பெறும் குருவருள், வெண்ணீறு, எழுத்தஞ்சு, கோயில், அரன் உருவு, திருவடி, அர்ச்சனை, தொண்டாகிய எட்டும் அவ் வேதத்துள் ஒரு சிறிதுங் காணப்பெறுதிருந்தும் அதன்பொருளை இத்தேவாரம் எவ்வாறு அடக்கிக் கொண்டிருக்கவியலும்? ஆதலின் இருக்குமொழிப் பிள்ளையார், திருவிருக்குக் குறள் என்னும் இருசொற்றொடரினும் உள்ள இருக்கென்னுஞ்சொல் முன்பு நிறுவிய வண்ணம் நிறைமொழியையே குறிக்குமென்பது தெளிக. இவ்வாறன்றி "இருக்குவேதத்தின் ஒவ்வொருபாடலும் சூத்திரம் போன்று அளவிற்சிறியவும் பொருளிற்பெரியவுமா யிருப்பதுபோல் இப்பதிகங்களிலுள்ள ஒவ்வொரு பாடலும் அளவிற் குறுகியும் பொருளிற் பெருகியுமிருப்பதினிமித்தமே திருவிருக்குக் குறளென்றழைக்கப் படுகின்றன" ‡ என்று கூறுவோர் இப்பொருள் திருவிருக்குக்குறள் என்னுந் தொடரி லுள்ள குறள் என்னுஞ் சொல்லாலேயே குறிக்கப் படுதலையும் அதனால் இருக்கென்னுஞ் சொல் மிகையாவதையுங் காண்பா ராக. அன்றி இத்திருவிருக்குக் குறளென்னும் பாடல்கள் இருக்குவேத சூத்திரம்போன்றே அமைக்கப்பட்டிருப்பினும் அவை இருக்குவேதப் பொருளை அடக்கிக் கொண்டிருக்கவேண்டு மென்னும் கட்டாயம் எவ்வாறு எழுமோ புலப்படவில்லை! எனவே திருஞான சம்பந்தர் தேவாரம் இருக்குவேதப் பொரு ளுடையதன்றென்பது நிலையாயிற்று. இவ்வாறே அப்ப ருரைத் தமிழ் யசுர்வேத சாரமென்றும், சுந்தரர் செந்தமிழ் சாமவேத சாரமென்றும், வாதவூரர் வண்டமிழ் அதர்வணவேத சார மென்றுங் கூறுவோர் சம்பந்தர் சொற்றமிழ் 'தாக்கிற்றிரு

‡ திரு. மா. சாம்பசிவம் பிள்ளையவர்கள் இயற்றிய திருநான்மறை விளக்க ஆராய்ச்சி 55-ம் பக்கம்.

ஞான சம்பந்தன்' என்னும் பண்டையோர் கூற்றுக்கிணங்கத் தாக்கிற்சிறந் திருத்தலன்றி 'சிந்தையா லளவுபடா விசைப் பெருமை' * உடைமையால் சுந்தரர் செந்தமிழுடன் சாமவேதமென்னும் பட்டத்திற்குப் போராடும் வன்மையுடைமையானும், வாதவூரர் வண்டமிழ் அதர்வ வேதத்தைப்போல் உயிர்க் கிறுதிபயக்கும் 'அபிசார' வேள்விகளையும், வெருக் கொள்ளத் தகுந்த 'பில்லிசூனிய மந்திரங்களையும்'. பயிலாது உயிர்க் குறுதியும், மெல்லோசையும், 'சிவபுரத்துட்' சேர்ப்பிக்கும் தன்மையுமுடைய சொற்களை உடைமையானும் இவை பொருந்தாக் கூற்றுவதை உணர்க.

இவ்வாராய்ச்சியின் முடிபு யாதெனின், மறைகள் முதல் முடிவற்ற வகையினதொன்று, இப்பொழுது வழக்கிலிருக்கும் வகையினதொன்று என இருவகையினவென்பதும், இப்பொழுது வழக்கிலிருப்பவை முதல் முடிவற்றதாகவாவது, படைப்புக்காக இயற்றப்பட்டதாகவாவது இருக்க முடியாதென்பதும், என்றும் நின்று நிலவக்கூடிய உண்மைகளும், செம்பொருள்களும் இவைகளை விளக்கும் நூற்றெருகுதிகளுமே முதல் முடிவற்றன வென்பதும், இப்போது வழங்குபவை இடையில் தோன்றி, நின்று இனி ஒரு பொழுதில் அழியும் இயல்புடையனவே என்பதும், உலகப் படைப்பிற்கு முதலாயிருந்தது ஒருவகைத் திறலே என்பதும், இறைவரியற்றிய நால்வேதம் வழிவழியாக மக்களுக்கு வந்து சேர்ந்ததற்கான வரலாறுகூட இல்லையென் பதும், வரலாறு கூறுமிடத்தும் பல மாறுபாடுகள் காணப்படுதலின் அவை புனைந்துரையாக வேண்டுமென்பதும், வேதாகமங்களை யொப்பவே ஆறங்கம், புராணம் இய்ற்றப்பட்டனவென் பதும், இவையாவும் இறைவனல் இயற்றப்பட்டதற்கொப்பும் என்பதும், இக்கொள்கையுடனேயே இன்னும் பல நூல்கள் எழுந்து விளங்குகின்றனவென்பதும், ஆகலின் இவை யாவும் இறைவனல் இயற்றப் பட்டதாகக் கூறல் மறைத்துறையின் பாற்படுமென்பதும், எனினும் இந்நூல்கள் யாவும் பழ வரலாறுகளால் பெருமையுறுகின்றனவென்பதும், இவ்வரலாறுகளுக்குத் தக்க உட்கருத்துகள் உளவாதலின் அப்பெருமை அவைகளுக்கு

உரித்தானதே யென்பதும், இவ்வகையிலெல்லாம் தேவாரம் பிறப்பினுல் ஆரியவேதங்களை ஒத்ததேயென்பதும், நால்வர் இயற்றிய நான்மணிகளும் முறைமுறையாக நால்வேதங்களின் சார முடையனவென்று எண்ணற்கு இடமில்லை யென்பதும், எனவே தேவாரமும் ஒரு தனி முதல் நூலே யாமென்பது மாம்.

௳

ஓர் வழக்கீடு.

பண்டிதர், திரு. அ. கந்தசாமிப்பிள்ளையவர்கள்,
தமிழாசிரியர், கும்பகோணம்.

(திரு. ரா. இராகவையங்காரவர்கட்கு மறுப்பு.)

இடம்—உயர்தர நீதிமன்றம்.
காலம்—பகல் $12\frac{1}{2}$ நாழிகை

வருவோர் :—

1. அவைத்தலைவர். (பரிவாரங்களுடன்).
2. அறங்கூறவையத்தார்.
3. தமிழ் மகனர்—வழக்கிடுவோர் (வாதி).
4. வடமொழியாளர்—எதிரி (பிரதிவாதி).
5. வழக்கறிஞர்கள்.
   (I) தமிழ் மகனருக்காகப் பேசுவோர் த. வர்.
   (II) வடமொழியாளருக்காகப் பேசுவோர் வ. வர்.
6. காணவந்தோர்.

அவைத் தலைவர் :—ஐயா! தமிழ் மகனாரே! உமது வழக்கு எதுபற்றி?

தமிழ் மகனார் :—இவ்வடமொழியாளர், எமது பழம் பெருநிதியாகிய திருக்குறள், வடநூற் பொருள்கொண்டு பெருகி வளர்ந்ததென்றும், உதாரணமாக அந்நூற் கடவுள் வாழ்த்து வடமொழிப் போதாயனர் கூற்றின் பொருள்கொண்டமைந்ததென்றும் கூறுகிறார். நானோ, அது எங்களுடைமை அவர்கள் பொருளுக்கும் இதற்கும் இயைபு இல்லை என்று நாட்டுகிற்பேன். அவையத்தார் நன்கு ஆராய்ந்து, அது யாருடைமையென்று முடிவுகட்டி முறை செலுத்தவேண்டுகிறேன்.

அவைத்தலைவர் :—ஏ! அதற்கென்ன அவசரம் இப்போது? ஊரிலும், உலகிலும் மாந்தர் பசி, பிணி, பகையிவற்றால் துயருறுகின்றனர். அதை யொழிக்கும் வகைகாணாது, திருக்குறட் கடவுள்வாழ்த்தைத் திருவள்ளுவர் தாமாகத் தொகுத்தாலென்? போதாயனர் பொருளிற் பெருக்கிலென்? இதுபோன்ற வழக்குகள் இக்காலத்துக் குரியனவல்ல. ஆதலால் இவ்வழக்குத் தள்ளப்படும்.

அவையத்தார் :—ஆம், ஆம். ‘கிழவனையெடுத்து மணைமேல் வை’ என்பது போன்றது இது. ஒழிக; ஒழிக.

தமிழ் மகனார் :—ஐயன்மீர்! சற்றே பருள்கூறல்வேண்டும். உலகிற் பசி முதலியன ஒழிய இப்போது வேண்டுவன செல்வமும், அறிவுமே; செல்வத்தினும் அறிவே முதற்கண் வேண்டப்படும். அவ்வறிவு, கல்வியினால்; அக்கல்வி, தாய்மொழியால்; ஆகவே அம்மொழியின் இயல்பு, மாண்பு, செம்மை அறிந்தாலன்றிச் சற்பார்க்கு ஊக்கம் செல்லாது; ஆகலின் தாய்மொழிக்குரிய பணி செய்வதும் இக்காலத்துக்கு இன்றியமையாததே. ஆதலால் இவ்வழக்குத் தள்ளத்தகாது, கொள்ளவேதகும்.

அவைத்தலைவர் :—(தமிழ் வழக்கறிஞரை நோக்கி) அற்றேல் இவ்வழக்கின் கூறுகளை எடுத்து மொழிக.

த. வர் :—இவ்வழக்கு இரண்டு பகுதியுடையது; முதலது திருக்குறட் கடவுள் வாழ்த்துப் போதாயனர் பொருளால் வந்ததா? என்பது; அடுத்தது, திருமாலின் ஆயிரம்பேர்ச் சங்கர பாடியத்திலிருந்தும் கடவுட் பெயரைத் திருவள்ளுவர் கொண்டனரா? என்பது. இதில் முதலது உரிமை நாட்டும் வழக்காகவும் (Çivil Case) அடுத்தது ஆள்மாருட்டம் போல்வதாகலின் கொடுமை புரிதருவழக்காகவும் (Criminal Case) கொள்ளத்தகும். இவை முறையே தமிழர் சட்டம் (திருக்குறள்) 30 ஆம் அதிகாரம் 3 ஆம் பிரிவிலும் 28 ஆம் அதிகாரம் 4 ஆம் பிரிவிலும் அடங்கும்.

அவைத்தலைவர் :—ஓ! இது மொழிபற்றிய வழக்காயிருத்தலின் மொழிநிலை மன்றினுக்கு மாற்றப்படும். அந்த அவையத்தாரே இதைச்சோதிக்க உரிமையுடையோர். ஆதலின் அங்குச் சென்று நும் உரிமையை நாட்டுக.

இரண்டாம் பகுதி.

இடம் :—மொழிநிலை நீதிமன்றம்.

காலம் :—பிறிதொரு நாள் பகல் 12½ நாழிகை.

அவைத்தலைவர் :—மொழிநிலை மன்றத்தலைவர்.

அவையத்தார் :—இலக்கண, இலக்கிய தருக்கநூற் புலவர்,

பிறர் :—முற்குறித்தவாறே.

ஆவணம் :—(Records).

(I) சுதேசமித்திரன் அற்றைத்தாள் (27—10—30).
(II) ஸ்ரீபாடியம் (இராமாநுச பாடியம்) முதற்பகுதி.
(III) திருக்குறட் பரிமேலழகருரைப் பதிப்பு.

அவைத்தலைவர் :—(தமிழ் மகனரை நோக்கி) ஐய! நுமது வழக்கினைப் படித்தறிந்தோம். நீர் இவ்வழக்கைக் கொண்டு வரக் காரணம் யாது?

தமிழ்மகனர் :—இவ்வருடம் சென்ற ஐப்பசித் திங்கள் 11-ஆம் நாள் (27—10—1930) வெளிவந்த சுதேசமித்திரன் 10-ஆம் பக்கம் 2, 3, ஆம் பத்திகளில் வெளி வந்தவைகளே, இவ்வழக்கிட என்னைத் தூண்டியன. இதோ, அந்தப் பத்திரிகையும் ஆவணமாக அவை முன் வைக்கப்பட்டிருக்கிறது.

அவைத்தலைவர் :—(வடமொழியாளரை நோக்கித் தமிழ் மகனரின் வழக்கைப் படித்துக் காட்டி) ஐய! நுமது உரிமையை இவ்வவைமுன் நாட்டற்பாலீர்.

வடமொழியாளர் :—அப்படியே. என் கொள்கை போதாயனர் பொருள்கொண்டு திருவள்ளுவர் கடவுள் வாழ்த்து அமைந்தது என்பது. எனினும் அதற்குத் துணைவலியாக முற்படச் சிலகூற இடந்தரல்வேண்டும். (1) இது சேதுவேந்தரவைக்களப்புலவர் மகாவித்துவான் ரா. இராகவையங்கார் அவர்களாற் கூறப்பட்டது.

வ. வ. ர் :—இந்த ரா. இராகவையங்கார், தமிழாலேயே உண்டு, உடுத்து, உலாவி, மாண்பு பெற்றவரன்றோ?

வடமொழியாளர் :—ஆம்.

த. வ. ர் :—அவர், முன்னொருமுறை ஒருநூல் வஞ்சிமாநகர் என்று எழுதியிருக்கின்றாரா? அது பல பெரியார்களும் மறுக்கப் பட்டதொன்றல்லவா?

வடமொழியாளர் :—இருக்கலாம் (2) இது அண்ணாமலைப் பல்கலைக்கழகத்திற் கூறி நாட்டப்பட்டது.

வ. வ. ர் :—அன்று அங்குப் பல அறிஞர் கூடியிருந்தனரா?

வடமொழியாளர் :—ஆம்.

த. வ. ர் :—அவருட் பெரும்பாலோர்க்குத் தமிழே தெரியா தன்றோ?

வடமொழியாளர் ;—ஆம்.

வ. வ. ர் :—.......................தமிழ் தெரிந்தவர் சிலரேனும் அங்கிருந்திருக்கலாமே?

வடமொழியாளர் :—ஆம்.

த. வ. ர் :—சிலரும், கண்ணோட்டமுடையோராயும், மறுக்க அமையம் நேரப் பெறுதாருமா யிருந்திருக்கலாமே?

வடமொழியாளர் :—இருக்கலாம். (3) தொல்காப்பியர் மொழி பெயர்த்தலை நூல் யாப்பினுளொன்றென்கின்றனர்.

த. வ. ர்:—திருக்குறள் வேறு நூலினின்று மொழிபெயர்த்த தென்று தொல்காப்பியர் கூறினரில்லையே?

வடமொழியாளர் :—தெரியாது. (4) சூதாடிக் கெட்டோர் கதை பாரதத்திற் கூறப்பட்டிருக்கிறது. இதைக் கொண்டே திருவள்ளுவர் சூது என்ற அதிகாரம் எழுதியிருக்கிறார்.

த. வ. ர் :—'இருமனப்பெண்டிர், கள், கவறு (சூது) இவை வறுமை விளைவிப்பன' என்று கூறித் திருவள்ளுவர் முறையே அவற்றை 'வரைவின் மகளிர், கள்ளுண்ணாமை, சூது என்ற அதிகாரத்தால் கூறியிருக்கின்றார். 'சூது' பாரதக்கதையில் இருந்து எடுத்ததென்றால், ஏனைய 'வரைவின் மகளிர்'க்கும் 'கள்ளுண்ணமை'க்கும் பாரதக் கதையுண்டா?

வடமொழியாளர் :—தெரியாது. (5) திருவள்ளுவ மாலையில் 'வேதப்பொருளை விரகால் விரித்துலகோர், ஓதத் தமிழா லுரை செய்தார், (குறள்) என்றும், "அருமறைக-ளைந்தும் சமய நூல் ஆறும்நம் வள்ளுவனர்-புந்தி மொழிந்த பொருள்" என்றும் கூறியிருக்கிறது.

த. வ. ர் :—அப்பாடல்களுக்கு அவ்வாறு பொருள்கொண்டு என் இடர்ப்படல் வேண்டும்? செவ்விதான பொருள் எளிதிற் பெறலாகுமே. "திருக்குறள் பயில்வோர் வேதப் பொருளைப் பயின்றவரே யாவர். உலகோர் வேதப்பொருளை விரித்து ஓதிக்கொள்ளுமாறு தமிழிற்குறள் செய்தார்" என் பதுதானே அதன்பொருள். இச்சுனையுட் படிந்தோர், கங்கை யாடிய பயனுறுவர் என்றால் கங்கைநீர் அச்சுனைநீருட் கலந் துள்ளதென்று பொருள்?

இனி அடுத்தது :— "நம் வள்ளுவனார் தமது புந்தியால் ஆராய்ந்து மொழிந்த பொருள்கள் தாம்—அருமறைநான்கும், சமய நூலாறும் தரும்பொருள்களாவன" என்பது தானே தெள்ளிய பொருள்.

வடமொழியாளர் :—(6) பரிமேலழகர் தம் உரையில் திருக் குறளிற் சில பகுதிகள் வடநூல் மதம்பற்றியன என்றெழுது கிறார்.

த. வ. ர் :—அதுவேறு—பரிமேலழகர் கூறுவது பொருந் துமா? என்பதைத் தனிப்பட ஆராயப் பிறிதோர் இடமும், காலமும்வேண்டும். திருக்குறளை யாங்கிலத்தில் மொழி பெயர்த்த ஜீ. யூ. போப் என்பாரும் கிறிஸ்துவ வேதத்திலிருந்து திருவள்ளுவர் குறளை எழுதினர் என்பர். அவையெல்லாமா பொருள்? மூலத்திலிருந்து சான்று காட்டலே தகுதி.

அவையத்தார் :— ஆம், ஆம் வடமொழியாளரீர்! இனி அப்பாற்செல்லும்.

வடமொழியாளர் :—இனி, போதாயனர் பொருளைத் திரு வள்ளுவர் அமைத்தமை காட்டுவேன்.

த. வ. ர் :—ஒழுக்கநூல் எழுதியவரும், இராமாநுச பாடி யத்தில் வாக்கியக்காரர் என்று ஆளப்படுவாருமாகிய போதா யனர் ஒருவர் தாமோ?

வடமொழியாளர் :—அவ்விருவரும் வேறே; ஒருவரே என்ற கொள்கையும் உண்டு. வடமொழியிற் போதாயனர்—கடவுளையடைவதற்கு "இடையறவுபடாது நினைப்பு" (த்ருவாநுஸ்மிருதி) வேண்டும் என்றும், அது, விவேகம் முதலிய ஏழினுலு உண்டாகும் என்றும் கூறுகின்றார். அவை; விவேகம், விமோகம், அப்பியாசம், கிரியை, கலியாணம், அனவசாதம், அநுத்தர்ஷம் என்பன. இவ்வேழினுலும் அது (இடையறவு படாத தியானம்) கைகூடும் என்று அவர் கூறியதையே திருவள்ளுவர் ஒவ்வொரு குறட்பாவால் மொழிபெயர்த்துக் கடவுள் வாழ்த்தெனக் கூறினர்.

த. வ. ர் :—ஆயின், திருவள்ளுவர் அவற்றிற்கு எட்டுக் குறள் மட்டும் கூறிற்போதுமே, பத்துக்குறள் கூறுவானேன்?

வடமொழியாளர் :—முதற்குறளாற் கடவுள் ஒருவர் உண்டென்னும் உண்மையையும், இறுதிக் குறளாற் பயனும் ஆகப் பத்துக் குறளும் கூறினர்.

த. வ. ர் :—போதாயனர், கடவுளுண்மை கூறி, அகரவுயிரை உவமை காட்டியதுண்டா ?.பயன் கூறியதுண்டா?

வடமொழியாளர் :—இல்லை, இல்லை, இறைவனுக்கு அகரவுயிரை உவமங் காட்டிப் போதாயனர் கூறவில்லை. ஆயினும், மாண்டுக்ய சுருதி, கௌடபாதாசாரியர் காரிகை, தத்துவத்திரய° வியாக்கியானம் இவை கூறுகின்றன.

அவைத்தலைவர் :—(சினம் மிகுந்து வடமொழியாளரை நோக்கி) ஐயா! கண்டவாறெல்லாம் பிதற்றுகிறீர்; எடுத்துக் கொண்ட வழக்குப் போதாயனரும்-திருக்குறட் கடவுள் வாழ்த்தும் என்பது. முதற்குறளும், இறுதிக்குறளும் உமது கொள்கைக்கு ஆதாரம் தருகின்றனவா? என்பதே வினை. அதற்கேற்ற விடை தருக. மண்டூக்யர் கூறினர், தவளையார் கூறினர் என்பதெதற்கு?

வடமொழியாளர் :—ஆம், தவறு தான். மகாவித்வான் இராகவையங்கார் சுவாமிகள் அவ்வாறு கூறினர்கள். அவ்விரு குறள்களுக்கும் போதாயனர் கூற்றுக்கும் யாதோரியையும்

இல்லை. ஆனாலும் மற்றை யெட்டுக்குறளும் அப்படியே போதாயனர் கூற்றை மொழிபெயர்த்தவை யென்று காட்டு கிற்பேன். அவற்றுள்.

முதலாவது இடையறவுபடாத நினைப்பு (த்ருவாநுஸ்மிருதி) வேண்டுமென்று அவர் கூறுவதைத் திருக்குறளில்,

மலர்மிசை யேகினன் மாணடி சேர்ந்தார்
நிலமிசை நீடு வாழ்வார்—

என்று மொழி பெயர்த்துக் கூறினர். இந்நினைப்புக் கைகூடற் குரிய சாதனங்கள் ஏழனையும், ஏழுகுறளில் மொழி பெயர்த் தார். (அடிசேர்தல்—இடைவிடாது நினைத்தல்.)

தமிழ்மகனர் :—போதாயனர், இந்நினைப்புக்குப் பின்வரும் ஏழும் அங்கமாகும் என்று தானே கூறினர். அப்படியாயின், உமது கொள்கைப்படி முதற்குறளிள் கடவுளுண்மை கூறி, அடுத்த குறளில் (த்ருவாநுஸ்மிருதி) இடையறவு படாத நினைப்புக் கூறிப் பின் ஏனைய முறையே கூறல்வேண்டும். அவை யீர்! அவைத்தலைவரீர்! குறித்துக் கொள்ளல்வேண்டும். இவர் கொள்கை புன்மையேயானல் இரண்டாங் குறளாக "மலர் மிசை யேகினன்" என்னுங்குறள் இருக்கவேண்டும். அப்படி யில்லையே இதோ திருக்குறள். பிரித்துப் பார்மின் "மலர் மிசையேகினன்" என்பது மூன்ருங் குறளாகவன்றே இருக் கிறது. என்ன பித்தராட்டம். பட்டப் பகலிற் வெள்ளையடிப் பதும் இவ்வளவு மோசமாயிராதே! (அனைவரும் பார்க்கின்றனர், மூக்கின்மேற் சுட்டுவிரல் வைத்துப் பெருவியப்புறுகின்றனர்.)

த. வ. ர் :—உமது இராகவையங்கார், பரிமேலழகருரைப் பதிப்பைத்தானே ஆதாரங் கொள்கின்றனர்?

வடமொழியாளர் :—ஆம் சுதேசமித்திரன் பத்திரிகையில் அப்படித்தான் தெரிகிறது.

அவைத்தலைவர் :— ஐயங்கார் தமது பிரசங்கத்தில் இரண்டாங் குறளைப் பிற்காலத்தார் மூன்ருங் குறளாக மாற்றி யெழுதிக் கொண்டனரென்று அதற்கொரு பொய்யுரை காட்டிக் கூறவில்லையோ?

வடமொழியாளர் :— இல்லை. இல்லை.

அவையத்தார்:— மறந்திருக்கலாம்; அல்லது யாவர் கவனிக்கப் போகின்றனரென்று அலட்சியம் செய்திருக்கலாம்.

வடமொழியாளர் :— இரண்டாவது- அக்நினைப்புக்குச் சாதனமாவனவென்று கூறுவனவற்றுள் (1) விவேகம். அதனையே திருக்குறளில்—

கற்றதனாலாய பயனென் கொல் வாலறிவன்
நற்றாள் தொழாஅர் எனின்

என்று மொழி பெயர்த்தனர்.

தமிழ் மகனர் :— ஐயா! சற்று நன்றாகக் கூறல்வேண்டும். இந்த விவேகம் எதனால் உண்டாகிறதென்று போதாயனர் கூறுகிறார். (ஒரு புத்தகத்தைக்காட்டி) இதோ இந்தப் புத்தகத்தைப் பாரும். இதுதானே ஸ்ரீபாடியம் என்பது; இதன் முதற்பகுதி 123 ஆம்பக்கம்-13-15வரிகளைப் படித்துப் பாரும். இவை தானே கூறுவன? அவையீர்! குறித்துக்கொள்ளல் வேண்டும். அவர் (போதாயனர்) "சாதி முதலியவற்றால், இழிந்தோரிடத்து உணவுகொள்ளாது தூயஉணவு உண்பதனால் விவேகம் உண்டாகும்" என்கின்றனர்; திருவள்ளுவரோ? கல்வியினால் அறிவு உண்டாகும்; அவ்வறிவுக்குப்பயன் கடவுளைவழிபடுதல்." என்று கூறுகிறார்.

அறிவுடையீர்:—இழிந்த சாதியானிடம் சோறுண்ணாது; உயர்ந்த சாதியானிடம் சோறுண்பதனால் உதிப்பது தான் விவேகம். அதனாலே இடையறாத நினைப்பு உண்டாகும் என்று கூறியதற்கும்—

தடையற்ற அறிவுடையவனாகிய இறைவனது திருவடிகளை வணங்குவதே கல்வியறிவுக்குப் பயன் என்று கூறுவதற்கும்— என்ன இயைபு? அறிவுடையீர்!

த. வ. ர் :— ஐயா வடமொழியாளரீர்! திருவள்ளுவரைச் சாப்பாட்டுராமர் ஆக்கிவிட்டீர்.

(பெருஞ்சிரிப்பு)

வடமொழியாளர் :— அடுத்தது (2) விமோகம் அதனையே திருக்குறளில்.

வேண்டுதல் வேண்டாமை யிலானடி சேர்ந்தார்க்கு
யாண்டும் இடும்பை யில

என்று மொழிபெயர்த்தனர்.

தமிழ்மகனர்:— ஆசையின்றிக் கோபமின்றிச் சாந்தமாயிருப்பதனல் இடையருத நினைப்புண்டாகும் என்பது (ஷை, ஷை, ஷை, 16, 17 வரிகள்) அவர் கூற்று. திருவள்ளுவர்க்கு அது கருத்தாயின் உள்ளவாறே மொழிபெயர்த்துக் கூறி யிருக்கலாம். அத்தன்மையைக் கடவுள் மேலேற்றிக் கூறினரென்பது பயனில் கூற்ருகும். அல்லதூஉம், வேண்டுதல் என்பது 'ஆசை' யென்ற வடசொல்லின் மொழிபெயர்ப்பாக வைத்துக் கொள்ளினும், 'வேண்டாமை' என்பது, 'கோபம்' என்ற சொல்லின் மொழிபெயர்ப்பாகக்கொள்ள முடியாமலிருக்கிறது. ஒருவன் ஒருபொருளை வேண்டாமைக்கும் கோபித்தலுக்கும் வேறுபாடு உண்டு.

ஆகையினல், அதனை யிவர் மொழி பெயர்த்தாரென்பதும், அதனைக் கடவுள் மேலேற்றினரென்பதும் பொருந்தாவுரைகளாம்.

வடமொழியாளர்:— அடுத்தது (3) அப்பியாசம். அது: அந்தப் புருஷ பாவனையினல் இடையரு நினைப்புண்டாகும் என்பது, அதனையே திருக்குறளில்

இருள் சேரிருவினையும் சேரா விறைவன்
பொருள் சேர் புகழ் புரிந்தார் மாட்டு.

என்று மொழிபெயர்த்தனர்.

தமிழ்மகனர்:— இங்குப் 'புகழ்புரிதல்—புகழைச்சொல்லுதல்' அது வாயின் செயல்; அங்குப்பாவனை-மனத்தின் செயல். பாவனையினல் இடையரு நினைப்புண்டாகு மென்பதற்கும்—

இறைவனது பொருள் செறிந்தனவாகிய புகழைச் சொல்லு வாரை, அறம், பாவமிரண்டும் அடையா (பிறவியறும்) என்ப தற்கும்—என்ன இயைபுஉண்டோ? அவையீர் ஆய்மின்!

வடமொழியாளர்:— அடுத்தது (4) கிரியை; அவை-ஐம் பெருவேள்வி, தானம், தவம், பட்டினி கிடத்தல் என்பவை—இவற்றால் இடையறு நினைப்புண்டாகும் என்று போதாயனர் கூறியதையே திருக்குறளில்—

பொறிவாயி லைந்தவித்தான் பொய்தீ ரொழுக்க
நெறிநின்றார் நீடுவாழ் வார்.

என்று மொழிபெயர்த்தனர்.

தமிழ்மகனார்:— அவையீர்! திருவள்ளுவர், கல்வியறிவிற் குப் பயன் கடவுள் வழிபாடு என்று கூறி, அவ்வழிபாடுதானும் மனம், மொழி, மெய்களால் செய்யற்பாலது என்பார். மனத் தால் வழிபடலை "மலர்மிசை" "வேண்டுதல் வேண்டாமை" என்ற இரு குறளிற்கூறி, "இருள்சேர்" என்ற குறளால் மொழியால் வழிபடலைக்கூறி "பொறிவாயில்" என்ற இக்குற ளால் உடலால் வழிபடலைக்கூறினர்—இம்முறையறியாது, பிறர் கூறுவன போலியாம்.

அவர் கூற்று, வேள்வி, பட்டினி கிடத்தல் முதலியன இடையறு நினைப்புக்கு ஏது என்பது; அதற்கும், இறைவனது பொய்தீர்ந்த ஒழுக்க நெறியைக் கடைபிடித்தொழுகியோர் வீடு பேறடைவர் என்னும் இதற்கும் என்ன இயைபு உண்டு?

வடமொழியாளர் :—அடுத்தது (5) கல்யாணம் என்பது. அது—உண்மைபேசுதல், அருளுடைமை, கொல்லாமை, ஈகை யிவற்றையுடையது. இதனையுடையோர்க்கு இடையறு நினைப் புண்டாகும் என்று போதாயனர் கூறியதையே திருக்குறளில்

கோளில் பொறியிற் குணமிலவே யெண்குணத்தான்
தாளை வணங்காத் தலை

என்று மொழி பெயர்த்தனர்.

தமிழ்மகனார் :—அவையீர்! குறிக்கொண்மின். கிரியையை மொழி பெயர்த்தது ஆறும்குறள். அதற்கடுத்த கல்யாணத்தை மொழி பெயர்த்தது "கோளில்" என்னும் ஒன்பதாம் குறளா? மொழிபெயர்ப்பு • உண்மையானால் "கோளில் பொறியில்" என்ற குறளை ஏழாம் குறளாகவன்றே கொண்டு கூறியிருத்தல் வேண்டும். (சுதேசமித்திரனைக் கையிலெடுத்து பக்கம் 10, பத்தி 3, வரி 60-63 படிக்கத் தொடங்கி) "அந்த ரிஷி மார்க்கத்தை எவ்வளவு ஒழுங்காகக் கொண்டு பத்துக் குறளும் எங்ஙனம் தொடர்புபட்டு விளங்குகின்றன என்று எளிதிற் காணலாம்" என்று மகா வித்துவான் இராகவையங்கார் கூறுவது இவற்றை யெல்லாம்உட்கொண்டு தானே? கேண்மின்! கேண்மின்!!

(கைகொட்டிய பெருஞ்சிரிப்பு)

அல்லதூஉம்:— உண்மை பேசுதல் ஈகை யிவற்றால் இடைபறு நினைப்புண்டாகும் என்பதற்கும்—இறைவனை வணங்காத தலை யிருந்தும், இல்லாததோடொன்று என்பதற்கும் எவ்வித மான இயைபேனும் உண்டோ?

காணவந்தோர்;— பாவம் இதோடு நின்றுவிட்டாலும் போதும் வடமொழியாளர் ஏதோ இன்னும் வாய்திறக்கப் போகிறாரே.

வடமொழியாளர்:— அடுத்தது (6) அனவஸூாதம் என்பது அது,—இடவேறுபாடு, காலவேறுபாடு, பிறதுயர் இவற்றால் மனம் உடைந்துபோகாமை. இதனால் இடைபறுநினைப்புண்டாகும். இதனையே திருக்குறளில்

> தனக்குவமை யில்லாதான் தாள்சேர்ந்தார்க் கல்லால்
> மனக்கவலை மாற்ற லரிது

என்று மொழிபெயர்த்தனர்.

தமிழ்மகனார்:— அறிஞர்காள்! இடவேறுபாட்டாலும், காலவேறுபாட்டாலும் பிறதுயரம்பற்றியும் மனம் உடைந்து போகாது நினைக்கவேண்டும் என்பதற்கும், இறைவனது திரு

வடிப் பற்றுடையோரோ கவலையொழியப்பெறுவர்; ஏனையோர் கவலைக்கடலுள் ஆழ்வர் என்பதற்கும் யாது இயைபுண்டோ ஆய்மின்.

வடமொழியாளர்:— அடுத்தது (7) அநர்த்தர்ஷம் என்பது. அது, முன் கூறினபடி துன்பினுல் சிதைவதுபோலவே, மகிழ்வினுலும் மனம் சிதையலாகாது என்பது. அதுவும் இடையறுநினைப்புக்கு ஏதுவாகும் என்பதாம். அதனையே திருக்குறளில்,

> அறவாழி யந்தணன் தாள்சேர்ந்தார்க் கல்லாற்
> பிறவாழி நீந்த லரிது

என்று மொழி பெயர்த்தனர்.

தமிழ்மகனுர் :—மிக்க மகிழ்ச்சிக்கு இடங்கொடுத்து அதனுல்மனஞ்சிதைந்து போகாது நினைக்கவேண்டும் என்பதற்கும் அறக்கடலாகிய இறைவன் திருவடியைப் புணையாகப்பற்றி, ஏனையபொருள், இன்பக் கடலையும் கடந்து, வீடாகியபேரின்பக்கடலாடுக என்பதற்கும் என்ன இயைபுண்டு?

வ. வ. ர் :—இங்குப் பிறவாழி என்பதற்கு மகாவித்துவான் இராகவையங்கார் ஸ்வாமி உரை கூறியிருப்பதைக் கவனித்தீரா?

தமிழ்மகனுர் :—ஐயோ! இன்னும் அதை வேறே கிளறவேண்டுமா? அது போதாயனர் கருத்தையும் தழுவவில்லை; திருவள்ளுவர் கருத்தையும் தழுவவில்லை. ஐயங்கார் கருத்தாகவே யிருக்கிறது. பிறவாழி நீந்தல் என்பதற்கு அவர் கூறுவது செல்வம் பற்றிவரும் மகிழ்ச்சியில் மூழ்கலாகாது. மாதரைத்தழுவும் இன்பம்பற்றி வரும் மகிழ்ச்சியில் மூழ்கலாகாது என்பது. எவ்வித மகிழ்ச்சிக்கும் இடந்தரலாகாது என்பர் போதாயனர். ஐயங்காரோ, செல்வம், மாதர் என்னும் இரண்டென வரையறுப்பர். இவ்விரண்டினைத் தவிரப்பிறவும் மகிழ்ச்சி விளைப்பனஉளவாதலின் அவற்றையெல்லாம் அடக்கின அவர் கூற்றில் ஐயங்கார்கூற்று அடங்கவில்லை; இனித் திருவள்ளுவரோ, பொருளும், காமமும் இன்பதுன்பங்கள் நிறைந்தன அவற்றைக் கடக்கவேண்டும் என்பர். ஐயங்காரோ

அவற்றின் இன்பத்தில் மாத்திரம் மூழ்கலாகாது என்கிற்பர். இதிலும் ஐயங்கார் கூற்று அடங்கிற்றில்லை. போதாயனர், துன்பத்திற் கிடங்கொடுக்கலாகாது (அனவசாதம்)' எனவும், அவ்வாறே மகிழ்ச்சிக்கும் இடங்கொடுக்கலாகாது (அநுத்தர்ஷம்) எனவும் கூறினர். ஐயங்கார் சுவாமிகள் இரண்டாவதனைக் குறளோடு பொருத்த, செல்வமும், காமமும் பற்றியே மகிழ்ச்சி வரும், பிறிதாறு இல்லையென மயங்கிக் கூறி இடர்ப்பட்டுழல்கின்றனர்.

அவைத்தலைவர்:— (வழக்காளிகளையும் வழக்கறிஞர்களையும் நோக்கி) இன்னும் நீவிர் கூறிக்கொள்வனஉளவேல் கூறுமின்.

வடமொழியாளர்:— ஒன்றும் இல்லை.

தமிழ்மகனர்;— யான் கூறவேண்டுவது இன்னும் ஒன்றுண்டு. அது—இக்காலத்தில் இது போன்றவற்றை நாட்டுதற்குச் சரித்திர ஆசிரியர்கூற்றும் கடைப்பிடிக்கத் தக்கது. அவர் கூற்றின்படி இராமாநுசர் 11ஆம் நூற்றூண்டினராவர். அவரால் வைணவனுக்கப்பட்டான் ஒரு ஒய்சளன் விஷ்ணுவர்த்தனனென்பான். அவன் காலம் கி. பி 11ஆம் நூற்றூண்டு ஆதலால் 'இராமநுசரும் அக்காலத்தினரே என்ப. சோழ சரித்திரத்தின்படி அவர் 12-ஆம் நூற்றூண்டின் முதலிலும் இருந்ததாகத் தெரிகிறது. அந்த இராமாநுசரால் வாக்யகாரர், விருத்திகாரர் என்று ஆளப்படுபவர் போதாயனர். (ஒழுக்க நூலெழுதிய போதாயனர் என்பார் வேறு,) ஆகையால் இவர் அவருக்கு (இராமாநுசர்) சற்று முன்பிருந்தவராதல்வேண்டும். இல்லையென்று இரண்டொரு நூற்றூண்டுக்கு முந்தி வைத்துக் கொள்ளினும் போதாயனர் காலம் 10-ஆம் நூற்றூண்டேன்னலாம்.

இனி, மணிமேகலை கி. பி. 2ஆம் நூற்றூண்டினது என்ப. அந்நூலில் ஆளப்படும் திருக்குறள் அதற்கு முந்தியதென்பதில் ஒரு தடையுமில்லை, இரண்டொரு நூற்றூண்டு முந்தியதென்று வைத்துக் கொள்ளினும், திருக்குறள் கி. பி. முதல் நூற்றூண்டே அல்லது அதற்கு முற்பட்ட காலம் என்று தெரிகிறது.

என்ன அநியாயம் பாருங்கள்! ஆயிரம் வருடத்துக்குப் பின் பிறந்தவர் எழுதின ஒன்றை ஆயிரம் வருடங்கட்கு முன்னிருந்தவர் தொகுத்தாரென்பது இது "நீ பழிக்காவிடினும் உனது பேரனாவது பழிப்பான்" என்னும் ஓநாய் கதையாகவே முடிகிறது. இவ்வளவே என் வழக்கும்.

அவைத்தலைவர் :— அறங்கூறவையத்தாரை நோக்கிப் அறிஞரீர்! இவ்விருவர் வழக்கினும் வன்மை மென்மைகளைக் குறிக்கொண்டிருப்பீர்கள். அதுபற்றிய நும்கொள்கையை நடுநிலை திறம்பாது வெளியிடுமின்.

அறங்கூறவையத்தாருள் ஒருவர் :— ஐய! வடமொழிக் கூற்று ஒன்றும் திருக்குறளை யொக்கவில்லை யாயினும், 'கிரியை' என்ற போதாயனர் கூற்றுக்கும்— "பொய்தீ ரொழுக்கநெறி" என்னும் குறளுக்கும் ஒப்புமை காணப்படுகிறது.

மற்றொருவர் :—அதைக் கூறவேண்டுமென்பதே என் கருத்தும். அந்தக்குறளினால் பிரதிவாதிக்குச் சாதகமிருக்கிறதாக நண்பர் கருதியது பிழை. அந்தக் குறளினாற்றான் வாதிக்கு மிக்க சாதகம் இருக்கிறது. அந்தக்குறளில் "நீடுவாழ்வார்" என்று கூறியிருக்கிறது. அது வீடு பேற்றையே குறிக்கும். வீடு பேற்றிற்கு அவர் (போதாயனர்) கூறும் பட்டினி கிடத்தல் முதலியன நேரே வழியாகாமையையும், திருவள்ளுவர் அதனை மெய்யுணர்தல், அவாவறுத்தல் என்ற அதிகாரங்களில் கூறியிருத்தலையும் ஆராய்க.

அல்லதூஉம், முன்பின் பொருத்தமற்ற கிரியை என்பது தான் திருவள்ளுவர் கூறிய ஒழுக்கமென்று சொல்வது மேனாட்டில் ஓரிடம் 'கம்பர் நிலம்' (Cumber Land) என்றிருப்பதனால் கம்பநாடர் ஆங்கிலநாட்டிற் பிறந்தவர் என்பது போன்று எள்ளிநகையாடற் பாலதாம்.

தீர்ப்பு.

அவைத்தலைவர் :—ஐயன்மீர்! வடமொழியாளர் தங்கொள்கைக்குத் துணிவலி கொள்வன வெறும் பதர்கள் என்பதைத்

தமிழ் வழக்கறிஞர் குறுக்குக் கேள்விகளால் நாட்டிவிட்டனர். எங்கோ ஓரிடத்தில் யாரோ ஒருவர் தம்போக்கில் ஏதோ கூறியன கொண்டு, மிக ஒழுங்காக வேறொருவர் வேறொரு கொள்கையோடும் முறையோடும் அமைத்திருப்பதைச் சிதைவு செய்தல் தீய செயலேயாகும்.

(1) அந்த வடநூலில் கூறியிருப்பது :—கடவுளிடத்து இடையறாத நினைப்புடையவனாதல் வேண்டும்; அந்நினைப்பு எதனால் உண்டாகுமென்றால், இழிந்த சாதியாரிடம் உண்ணாமையால் உண்டாகும். விவேகத்தாலும், பற்றும், சினமும் இல்லாமையாலும், நினைப்பைப் பிறவிடங்களிற் செல்லவொட்டாது அடிக்கடி கடவுள் பாலே செலுத்தப் பழகுவதாலும், பட்டினி கிடத்தல் முதலிய தொழிலாலும், உண்மைபேசல், கொல்லாமை முதலிய குணங்களினாலும், துன்பினால் மனஞ் சிதைந்துபோகாமையாலும், மகிழ்ச்சியினால் மனஞ்சிதைந்து போகாமையாலும் உண்டாகுமென்பது.

திருவள்ளுவர் கூறுவது:—(1) உலகு இறைவனை முதலாக உடையது. (2) கல்வி யறிவிற்குப்பயன் அவனைவழிபடுவதே. (மனம் மொழி மெய்களால் வணங்கக்கடவர்) (3) ஓயாதே உன்கி மனத்தால் வழிபாடாற்றின் வீடுபேறாகிய பெரும்பயனுண்டாகும் (4) அதனால் (இம்மைப்பயனாக) மூவகைத்துன்பங்களும் அடையா (5) வாழ்த்துவதால் (பிறவிக்குக்காரணமாகிய) அறமும் தொடர்புறா (6) உடம்பால் வழிபாடாற்றின் பிறப்பும் இறப்பும் இல்லை. (மனம் பொருந்தாவழி, வாயுரையும், செயலும் பயனுறா என வலியுறுத்தற்கு மனத்தால் வழிபடுவினை இருகுறளாற் கூறினார்) இவற்றை எதிர்மறைவாய்பாட்டானுங் கூறுவர். (7) இறைவனை நினையாதார்க்குக் கவலையொழியாது. (8) அவர் பொருள் பற்றியும், காமம் பற்றியும் வரும் இன்பதுன்பங்களில் மூழ்கிவருந்துவர். (9) இறைவனை வணங்காத்தலை பயனற்றதாகும். (உபலக்கணத்தால் வாழ்த்தாத வாயும் பயனற்றதாகும் என்பதும் பெறப்பட்டது) என்றுகூறினார். (இங்கும் நினைப்பின் உயர்வை வற்புறுத்த இருகுறள் கூறியிருப்பதுங் கவனிக்கத் தக்கது.)

இவையனைத்தையும் தொடுத்துக் கூறிமுடிப்பார். உடம்பாட்டானும், எதிர்மறையானும் (10) இறைவனை வழிபடார் பிறவித் துன்புட்பட்டழுந்தி வருந்துவர் என்று கூறிமுடித்தார்.

இவ்வாறு திருவள்ளுவர் தாம் மேற்கொண்ட பொருளை முறையாக வெடுத்து அமைத்திருக்கின்றனர். இதற்கும், அவ்வாறு கூறும் போதாயனர்கருத்துக்கும் யாதோரியையும் உளதாகத் தெரியவில்லை.

II திரு. ஐயங்கார் கூற்றின்படி 2, 3, 4 குறள்கள் தலைதடுமாறவேண்டியிருக்கின்றன. ஒன்பதாங்குறளை எழாங் குறளாக முடிச்சுப்போட்டிருப்பதும் பொருந்தாது. "உண்மைபேசுக, அருளுடையனுகுக. ஈகையுடையவனுகுக, கொல்லாமை மேற்கொள்க" என்று போதாயனர் கூறியதை "கோளில் பொறியிற் குணமிலவே யெண்குணத்தான், றாளை வணங்காத் தலை" என்று திருவள்ளுவர் மொழி பெயர்த்தாரென்பதைக் கல்லாதவனும் உடன்படான். இதுபோலவே அவர் கொள்கைகள் ஒவ்வொன்றும் உள்ளன என்பது தமிழ் மகனுரால் தெருட்டப்பட்டிருக்கிறது.

III இவ்விருவர் கூற்றிற்கும் யாதேனும் ஓர் இயைபு இருந்தாலன்றோ அதற்குமேல் சரித்திர ஆசிரியர் கூற்றின்படி காலங்கொண்டு தீர்மானிக்கவேண்டும். ஆதலால் காலம் பற்றிக் கூறுவதும் மிகை. இத்திருக்குறட் கடவுள் வாழ்த்துத் தமிழர் பொருளே, வடநூற் பொருள்கொண்டுருவாகியதென்பது பொய். இதனல், வடமொழியாளர், தமிழர் சட்டம் 30-ஆம் அதிகாரம் 3-ஆம் பிரிவின்படி குற்றவாளி யாவதோடு ஷை சட்டம் 18-ஆம் அதிகாரம், 1-ஆம் பிரிவின்படியும் குற்றவாளியாகின்றனர்.

மொழிநிலை நீதிமன்றம்,
1—3—31.

இங்ஙனம்,
அவைத்தலைவர்.

இவ்வழக்கின் மற்றொருபகுதி பின்னொருமுறை எடுத்துக் கொள்ளப்படும்.

குறிப்பு:—கட்டுரையாளர் காட்டியுள பிழை திருத்தங்கள், காலந்தாழ்த்துக் கிடைத்தமையின் அடுத்த இதழில் வெளிவருவன.

தமிழ் நிகழ்ச்சிகள்.

ஆங்கிலம் படித்தார் கட்புலத்தில் தமிழ்ப்பண்டிதர்கள்.

எமது அருமை நண்பர் திரு. சாமி. வேலாயுதம்பிள்ளை யவர்கள், இனி, நமது பொழிலில் தமிழ் நிகழ்ச்சிகள் என ஒரு தலைப்பு வெளிவர வேண்டுமெனக்கூறி,. அவ்வேலையினைத் தாமும் செய்துவருவதாகவும் ஒப்புக்கொண்டார்கள். அவர்கள் ஊக்கியவாறே இதனை எழுதத்தொடங்கிய நமக்கு முதலில் அவர்களைப்பற்றியதோர் நிகழ்ச்சியே கிடைத்திருப்பது, மிகப்பெரியதோர் வியப்பினையும் விடா நகைப்பினையும் உண்டாக்குகின்றது.

தஞ்சை மாநாட்டாண்மைக் கழகப் பள்ளிக்கூடங்களின் ஆசிரியர் கூட்டமொன்று, நிகழும் ஆண்டின் தேர்ச்சியமைப்பு முதலியவற்றைக் குறித்துச் சின்னாளின்முன் தஞ்சையில் கூடிற்றாம். அதற்குத் துணை செய்வதற்கெனத் தஞ்சை சில்லாக் கல்வியாராய்ச்சித் தலைவரவர்களும் (D. E. O.)வர்திருந்தனராம். சில அலுவல்கள் முடிந்தனவாம்; சில எஞ்சியனவாம். முடிந்தவற்றுள் ஒன்று, தமிழ்ப்பாடங்களின் தேர்ச்சிக்கழக உறுப்பினருள், இன்னும் ஒருவரைக் கூட்டியதும், அவ்விடத்திற்கு ஒரு L. T. கனவானை அமைத்ததுமாகும்.

தேர்ச்சிக் கழகத்தில் ஒருவரையோ பலரையோ கூட்டுவதில் யார்க்கும் ஏதும் தடையில்லை. ஆனால் அங்கக்கு அமைக்கவேண்டுவது யாரை? அந் நாட்டாண்மைக் கழகத்திலுள்ள ஏனைத் தமிழ்ப் பண்டிதர்களையா? யாதோர் இயையுமில்லாத L. T.க்களையா? நடுநிலையுடைய அறிஞர்கள் கூறுவார்களாக. இங்ஙனம் அமைத்ததின் காரணம், அத்தகைய L. T.க்களின் உதவியின்றி, வெறும் தமிழ்ப் பண்டிதர்களுக்கு ஒன்றும் இயலாதென்றோ, செவ்விதாக நடத்தத் தெரியாதென்றோ, தோன்றும் தப்பெண்ணம் அன்றோ? இவ்வெண்ணம் உண்மை அறிவுடைமையோடு கூடியதாகுமோ?

இனி, இப்போது அவ்விடத்தில் அமைக்கப் பெற்றவர், மேற்கூறிய எமது நண்பராகலின், இவர்களது சிறந்த தமிழ்ப் புலமையைப்பற்றி நமது பொழில் வாயிலாக உணர்ந்து வரும் நம் பொழில் அன்பர்கட்கு, நாம் ஒன்றும் கூறல் வேண்டா. தமிழறியாத பிறரொருவராயின், அவரால் உண்டாகும் பயன் என்னையோ? நாம் நேரே ஒருவரைக் குறிக்காது, ஒருவரது அமைப்பைப்பற்றியே குறித்தலின், இதனை எழுதியே தீர வேண்டியவராயினேம்.

மற்றைப் பாடங்களின் கழகங்களில், இணைக்கக்கூடிய தகுதியுடைய பண்டிதர்கள் இருந்தும், அங்கு ஓரிடத்தும் ஒரு பண்டிதரையும் இணைக்க நினைக்கவும் அறியாத அக்கூட்டத்தினர், தமிழ் பாடக் கழகத்திற்குமட்டும் ஒரு L. T. கனவானை இணைத்தது மிக்க அநீதியும் அறியாமையுமாகுமன்றோ?

இவ்வுண்மையினைத் தமிழ்ப் புரவலராகிய திரு. த. வே. உமாமகேசுவரம் பிள்ளையவர்களும் அவர்கள் நண்பர்களாகிய ஏனைத்தலைவர்களும் உணர்ந்து, இனியேனும், இங்ஙனம் பண்டிதர்கள் அவமதிக்கப் பெறாதவாறு பாதுகாத்துக் கொள்வார்களாக. (தொடரும்.)

பொழிற்றொண்டர், வே.